மலர்-1 இதழ்-4 அக்டோபர் 16-31 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக வெளிவரும் இமெயில் புத்தகம்



குலதெய்வம் தெரியாதவருக்கு வழிகாட்டும் ஸ்ரீசக்கரம்

பக்தியை மறைக்கும் ஆணவம்

## இராவணவதமும் தீபாவளியும் அற்புத தகவல்கள்



# பல நோய்களை தீர்க்கும் ஒரே மந்திரம்

மனிதர்களுக்கு வரும் நோய்கள் குறித்தும், மனித உடல் பாகத்தை மையமாக வைத்து எத்தனை நோய்கள் வரும் என்பதையும் அகத்தியர் மிக அழகாக கூறியுள்ளார். அதன்படி நோய் பீடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமும் கூறி யுள்ளார்.

ஆனால் அகத்தியர் கூறிய பல்வேறு மருந்துவ முறைகள் பாதுகாக்கப்படாமல் விட்டப்படியால் இன்னும் அவை பற்றிய குறிப்புகள் கிடைக்காமல் உள்ளது. தற்போது பல குறிப்புகளில் ஒரு சில மட்டும் கண்டுபிடிக்கப்பட்டு வழக்கில் உள்ளது.

கிடைத்த குறிப்புகளில் ஒரு சில மருத்துவக் குறிப்பு நெற்றியில் அணியும் திருநீரை மந்திர உரு ஏற்றினால் ஒரு சில நோய்கள் விலகும் என்று கூறியுள்ளார்.

அகத்தியர் அருளிய உடல்நோய்கள் அனைத் தையும் முற்றிலும் நீக்கும் இம்மந்திரத்தினை ஜெபித்து நோய்களினின்றும் விடுதலைப் பெற்று மகிழ்வுடன்வாழ்வோமே.......

**கணபதி மந்திரம்**

ஆமப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்ற
அருமையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
ஓமப்பா ஆதிகண பதிதானொன்று
உறுதியுள்ள மகாகண பதிதானொன்று
தாமப்பா நடனகண பதிதானொன்று
சங்கையுள்ள சக்திகண பதிதானொன்று
நாமப்பா சொல்லுகிறோம் ஒன்றாய்க் கேளு
நன்மையுள்ள வாலகண பதிதானொன்றே.
ஒன்றான உச்சிட்ட கணபதிதானொன்று
உத்தமமே உக்கிரகண பதிதானொன்று
நன்றான மூலகண பதிதானொன்று
நாட்டமுட அஷ்டகண பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூக்ஷந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன்
குணமாய்க்கேளு
நின்றாடு மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து
ஓம்கிலி அங்உங்கெண்ணே





ஆதி கணபதி, மகா கணபதி, நடன கண பதி, சக்தி கணபதி, பால கணபதி, உச்சிட்ட கணபதி, உக்கிர கணபதி, மூல கணபதி என எட்டு வகை கணபதி இருப்பதாக கூறுகிறார். இந்த எட்டு வகை கணபதிக்கும் ஒரே முலமந் திரம் இருக்கிறது. அது

“ஓம் கிலி அங் உங்”

என்பதாகும். இந்த மூல மந்திரத்தை எவ்வாறு பயன் படுத்தி பலனடைய வேண்டும் என்பதை பின் வருமாறு விளக்குகிறார்.

எண்ணமுடன் இடதுகையால் விபூதி
வைத்து ஏகாந்த கணபதியின் சுழியைநாட்டி
சொன்னமொழி தவறாமற் சுழியைப்பார்த்து
சுத்தமுடன் ஓம்கிலி அங்உங் கென்று
தன்னகமே சாட்சியாய் இருநூற்றெட்டுத் (208)
தான் செபித்து விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
முன்னிறைந்த சற்குருவின் கடாக்ஷத்தாலே
மூர்க்கமுடன் தீருகிற வியாதிகேளே.
கேளப்பா சுரமுடனே சன்னிதீரும்
கெடியான குன்மமுடன் காசந்தீரும்
சூளப்பா வஞ்சினையும் ஏவல்தீரும்
சுருக்கான பலவிஷமுந் தோஷந்தீரும்
வாளப்பா கரப்பனொடு கெர்ப்பரோகம்
வயற்றிலுள்ள திரட்சியெல்லாம்
வாங்கிப்போகும்
ஆளப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்று
ஆதியென்ற பூரணத்தில் அழுந்தலாமே.

இடதுகையில் சிறிதளவு வீபூதியை எடுத்துக் கொண்டு அதில் கணபதியின் சுழியான “உ” என்பதை எழுதிக் கொள்ள வேண்டும். பின்னர் அந்த திரு நீற்றைப் பார்த்து கணபதியின் மூல மந்திரத்தை இருநூற்றி எட்டு தடவைகள் செபிக்க வேண்டும் என்கிறார்.

இப்படி செபிக்கப் பட்ட விபூதியை அணிவதால் சுரமுடன் ஜன்னியும் தீருமாம், குன்மமுடன் காசமும் தீருமாம் வஞ்சனை, ஏவல்கள் தீருமாம். அத்துடன் பலவித தோஷங்கள் நீங்குமாம். இது தவிர கரப்பான், கெர்ப நோய்கள் வயிற்றில் இருக்கும் திரட்சிகள் எல்லாம் தீரும் என்கிறார் அகத்தியர்.



## பிரம்ம முகூர்த்தத்தின் மகத்துவம்

காலை 4.30 மணி முதல் 6 மணிக்குள்ளான வேளைக்கு பிரம்ம முகூர்த்தம் என்று பெயர். இரவில் உறங்கும் உயிர்கள் மீண்டும் எழுந்திருப்பதே சற்றேறக்குறைய மறுபிறவிதானே! எனவே, ஒவ்வொரு நாளும் காலையில் மறு பிறவி பெறுவதை ‘‘சிருஷ்டி’ (படைத்தல்) என்று சொல்லலாம். இத்தொழிலைச் செய்பவர் பிரம்மா. எனவே இவரது பெயரால், விடியற்காலைப் பொழுதை ‘‘பிரம்ம முகூர்த்தம்‘ என்று வைத்துள்ளார்கள். பிரம்ம முகூர்த்த வேளைக்கு திதி, வார, நட்சத்திர, யோக தோஷங்கள் கிடையாது. இது எப்போதுமே சுபவேளை தான். இந்நேரத்தில் எழுந்து குளித்து இறைவழிபாட்டைச் செய்து துவங்கும் வேலையில் முழு வெற்றி கிடைக்கும்.



# இறையடியாரை வணங்கி ஆழ்வாரானவர்

பெருமாளை துதித்துப் பாடியவர்களை ஆழ்வார்கள் என்றும் குறிப்பிடுவோம். ஆனால் பெருமாளின் பக்தரான நம்மாழ்வாரை துதித்துப் பாடி ஆழ்வார் என்றும் சிறப்பை பெற்றவர்தான் மதுரகவிஆழ்வார். எந்தநேரமும் பெருமாளை ஆராதித்தது வந்த நம்மாழ்வாரின் பக்தியில் ஈர்க்கப்பட்டு, அவரையே கடவுளாக எண்ணி நம்மாழ்வாருக்கு தாசனாக விளங்கிய மதுரகவி ஆழ்வாரின் கபடமற்ற பக்தியால் கவரப்பட்ட பெருமாள் மதுரகவியாரை ஆழ்வார்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டார்.

மதுரகவி ஆழ்வார் அயோத்தியில் இருந்தபோது தென்திசையில் இருந்து ஒரு ஜோதியைக் கண்டார். அந்த ஜோதியை பார்க்க வேண்டி தென் திசை நோக்கி நடந்தார். அப்படி அவர் நடந்து வந்தது தாமிரபரணிக் கரையோரம், அந்தக்காலத்தில் அப்பகுதி "குருகூர்" என்று அழைக்கப் பட்டது.

இது திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூர் செல்லும் வழியில் உள்ளது. அங்கு ஒரு புளியமரத்தின் கீழ் உள்ள ஒருவரிடம் அந்த ஜோதி கலந்தது. அவர் ஆழ்வார்களிலெல்லாம் சிறந்த ஆழ்வாரான நம்மாழ்வார் என்பதை புரிந்து கொண்ட மதுரகவியாழ்வார் அவரிடம் சரணடைந்தார். அவரையே தம் குருவாக ஏற்றுக் கொண்டார். இறைவனைப் பற்றி புகழ்ந்து பாடாமல், நம்மாழ்வாரைப் பற்றியே பதினோரு பாடல்களைப் பாடி துதித்தார். பரம்பொருளைப் பாடாமல் அவரின் பக்தரான நம்மாழ்வாரைப் பின்பற்றியே பெருமாள் வீற்றிருக்கும் பரமபதம் அடைந்தார் மதுரகவியாழ்வார்.

எந்தவித உள்நோக்கமின்றி, தனது பக்தர்களுக்கு சேவை செய்தாலே தன்னை நோக்கி கடும் தவம் செய்தால் கிடைக்கும் பலனை இறைவன் அருள்வான் என்பதற்கு மதுரகவியாழ்வாரின் வரலாறு மிகுந்த சாட்சியாக உள்ளது. இதைவிடச் சிறப்பு என்னவென்றால், நம்மாழ்வார் அமர்ந்து தவம் செய்த புளியமரமும் கூட புளியாழ்வார் என்று பெயர் பெற்றது. இதனால்தான் நமது முன் னோர்கள் பூவுடன் சேர்ந்த நாறும் மணக்கும் என்ற பழமொழியை முன்வைத்தனர். எந்த மனிதராக இருந்தாலும் அவர்கள் சேரும் இடத்திற்கேற்ப அவர்களின் தரமும் உயரும் என்பதை இறைவனின் திருவிளையாடல் எடுத்துச் சொல்லப்பட்டதுதான் புளியாழ்வார் வரலாறு.









# நட்சத்திரங்களும் அதற்குரிய தெய்வங்களும்

அஸ்வினி..........ஸ்ரீ சரஸ்வதி தேவி
பரணி................ஸ்ரீ துர்கா தேவி (அஸ்ட புஜம்)
கார்த்திகை.........ஸ்ரீ சரஹணபவன் (முருகப் பெருமான்)
ரோகிணி............ஸ்ரீ கிருஷ்ணன். (விஷ்ணு பெருமான்)
மிருகசீரிடம்........ஸ்ரீ சந்திர சூடேஸ்வர் (சிவ பெருமான்)
திருவாதிரை.......ஸ்ரீ சிவபெருமான்
புனர்பூசம்............ஸ்ரீ ராமர் (விஸ்ணு பெருமான்)
பூசம்...................ஸ்ரீ தட்சிணாமூர்த்தி (சிவபெருமான்)
ஆயில்யம்...........ஸ்ரீ ஆதிசேசன் (நாகம்மாள்)
மகம்...................ஸ்ரீ சூரிய பகவான் (சூரிய நாராயணர்)
பூரம்....................ஸ்ரீ ஆண்டாள் தேவி
உத்திரம்.............ஸ்ரீ மகாலக்மி தேவி
ஹஸ்தம்.............ஸ்ரீ காயத்திரி தேவி
சித்திரை.............ஸ்ரீ சக்கரத்தாழ்வார்
சுவாதி................ஸ்ரீ நரசிம்மமூர்த்தி
விசாகம்..............ஸ்ரீ முருகப் பெருமான்
அனுசம்..............ஸ்ரீ லக்ஷ்மி நாரயணர்
கேட்டை.............ஸ்ரீ வராஹ பெருமாள் (ஹயக்கிரீவர்)
மூலம்.................ஸ்ரீ ஆஞ்சனேயர்
பூராடம்...............ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் (சிவபெருமான்)
உத்திராடம்.........ஸ்ரீ வினாயகப் பெருமான்
திருவோணம்.....ஸ்ரீ ஹயக்கிரீவர் (விஷ்ணுப் பெருமான்)
அவிட்டம்...........ஸ்ரீ அனந்த சயனப் பெருமாள் (விஷ்ணுப் பெருமான்)
சதயம்.................ஸ்ரீ மிருத்யுஞ்ஜேஸ்வரர் (சிவபெருமான்)
பூரட்டாதி............ஸ்ரீ ஏகபாதர் (சிவபெருமான்)
உத்திரட்டாதி.....ஸ்ரீ மகா ஈஸ்வரர் (சிவபெருமான்)
ரேவதி................ஸ்ரீ அரங்கநாதன்

# பெண் குழந்தை பெற்றவரா?

## கன்னிகாதானத்தால் 21 தலைமுறையை கரையேற்றும் வரம் பெற்றவர்கள் நீங்கள்

தானத்தைப் பற்றி பல்வேறு வழிகளில் பல்வேறு தரப்பினர் பல தகவல்களை கொடுத்திருக்கின்றனர். அந்தவகையில், வயிற்றுப்பசியைப் போக்குகிற அன்னதானமே சிறந்தது என்று சொல்வார்கள். நிதானமே சிறந்தது என்பவர்களும் உண்டு. ஆனால், தானங்களிலேயே மிகப் பெரியதாக, மகா தானமாக சாஸ்திரம் குறிப்பிடுவது கன்னிகாதானத்தைதான்!

திருமணம் செய்துவைக்கும்போது, தந்தையானவர் தான் பெற்ற பெண்ணை மற்றொரு குடும்பத்தில் பிறந்த ஆண்மகனுக்கு தானமாக அளித்து அவனிடம் ஒப்படைக்கும் இந்த நிகழ்வையே கன்யாதானம் அல்லது கன்னிகாதானம் என்கிறார்கள்!



இந்த உலகில் பலவித தானங்கள் செய்யப்பட்டாலும் அவை எல்லாவற்றிலும் உயர்ந்தது இந்த கன்னிகாதானமே என்பதற்கு இந்த நிகழ்வின்போது சொல்லப்படுகிற சங்கல்பமும், மந்திரமுமே சாட்சி. ‘தசானாம்பூர்வேஷாம், தசானாம்பரேஷாம், மமஆத்மனஸ்ச ஏக விம்சதிகுல உத்தாரண..’ என்று அந்த மந்திரம் நீள்கிறது. அதாவது இதன் முழு விளக்கம் என்னவென்றால், “கன்யாதானம் செய்பவனுக்கு முன்னால் உள்ள பத்து தலைமுறையும், பின்னால் வருகிற பத்து தலைமுறையும், கன்யாதானம் செய்பவனது தலைமுறையையும் சேர்த்து ஆகமொத்தம் இருபத்தியோரு தலைமுறைகளையும் கரைசேர்க்கும் சக்தி பெற்ற கன்னிகாதானம். இவ்வளவு சக்தி வாய்ந்த மகத்தான இந்த மகாதானத்தைச் நான் செய்கிறேன்” என்பது மேற்கண்ட மந்திரத்தின் பொருள்.

உன் வம்சவிருத்திக்காக எம்குல விளக்கை உனக்கு தானமாக அளிக்கிறேன் என்று ஒரு தந்தை செய்யக் கூடிய கன்னிகாதானமே உலகில் அளிக்கப்படுகின்ற தானங்களில் மிகப்பெரியது என்று சாஸ்திரம் போற்றுகிறது.

ஆண்பிள்ளையைப் பெற்றால் அந்தப் பிள்ளை செய்கிற கர்மாவின் மூலம் அந்த ஒரு தலைமுறை மட்டுமே கரையேறும். ஆண்பிள்ளைக்கு குடும்பத்தை ஆளுகின்ற திறமையும், பெரியவர்களை காக்கின்ற சக்தியும் ஊட்டி வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு செயற்படாத ஆண் பிள்ளைகள் ஆண்மை என்றழைக்கப்படும் உயரிய பண்பை இழந்தவர்களாகவே கருதப்படும்.

அதே சமயம் பெண் பிள்ளைக்கு நல்லொழுக்கம், பெரியவர்களை அவமதிக்காமை, குடும்ப உறுப்பினரை கனிவாக கவனிக்கும் பண்பு போன்றவற்றை போதித்து, அவளைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து, மற்றொருவனின் வம்சவிருத்திக்காக அவளை தானம் செய்து கொடுத்தால்தான் மேற்கண்ட பலனை பெறமுடியும், இவ்வாறு பெண்பிள்ளை கன்னிகா தானம் செய்வதால் 21 தலைமுறைகளும் கரையேறுகிறது என்றால் பெண்பிள்ளையைப் பெற்றவன் எப்பேர்ப்பட்ட புண்ணியம் செய்தவன் என சிலாகிக்கிறார்கள் சான்றோர்கள்!

இதன் காரணமாகத்தான் முன் காலத்தில் ஏழை பெண்களின் திருமணத்திற்கு உதவுவது, பணக்காரர்கள் தங்கள் செலவில் திருமணம் செய்து வைப்பது போன்ற செயலில் ஈடுபட்டனர். வசதி வாய்ப்பு பெற்றவர்கள் கடமைக்காக செய்யாமல், ஒரு ஏழைப் பெண் மணவாழ்க்கை அமைய உள்ளார்ந்த அன்போடு உதவி செய்தால், தனது வம்சாவழியில் அனுபவித்து வரும் மிகக் கொடிய பாவங்களின் தீவிரத்தில் இருந்து விடுபடலாம்.



# அற்புதம் வாய்ந்த துளசி ராமாயணம்

## கடுமையான துன்பம் அனுபவித்த துளசிதாசர்



தென்னிந்தியாவில் வால்மீகி ராமாயணம், கம்ப ராமாயணம் பிரசித்தி பெற்றது போலவே, வட இந்தியாவில், குறிப்பாக கங்கை நதி பாயும் பிரதேசங்களில், ராம சரித் மானஸ் (துளசி ராமாயணம்) பிரசித்தி பெற்றது. இதை எழுதியவர் "துளசி தாசர்".

இவர் உத்திரப் பிரதேசத்தில் அலஹாபாத்துக்குக் கிழக்கே 200 மைல் தொலைவில் உள்ள ராஜ்பூர் என்ற ஊரில் 1532ஆம் ஆண்டு ஆத்மாராம் தாபே, ஹுலசீபாய் என்கிற பிராமணத் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் ராம்போலோ.

இவர் மூல நட்சத்திரத்தில் (அபுக்த மூலம்) பிறந்ததால், தாய் தந்தைக்கு மரணம் நிச்சயம் என்று அந்த நாளில் நம்பப்பட்டது. பிறக்கும்போதே குழந்தை ராம்போலாவுக்குப் பற்கள் வேறு முளைத்திருந்தன !இதற்குப் பரிகாரமாக, குழந்தையைக் கைவிட்டுவிட வேண்டும்;

குறைந்தபட்சம் எட்டு ஆண்டுகளாவது குழந்தையின் முகத்தைப் பார்க்கக் கூடாது என்றது சாஸ்திரம். பரம ஏழையான ஆத்மாராமும் நாமகரணம் போன்ற சடங்குகள் செய்து மகிழும் நிலையில் இருக்கவுமில்லை. குழந்தை பிறந்த சில நாட்களிலேயே ஹுலசீபாய் மரணமடைந்தாள்.

அதன்பிறகு குழந்தை ராம்போலாவுக்குச் செவிலித்தாயாக இருந்து வளர்த்தவரும் சிறுவனுக்கு ஐந்து வயது முடியும் முன்பே காலமானாள். இதன்பின், ராம்போலா ஒரு கவளம் சோற்றுக்காகத் தெருவில் அலைந்தான். உள்ளூர் அனுமார் கோயில் அவனுக்கு அடைக்கலம் தந்தது.

இந்த ராம்போலாவே பிற்காலத்தில் துளசிதாசர் என்று புகழ்பெற்றார். ராமானுஜரின் சிஷ்ய பரம்பரையில் ஐந்தாவது தலைமுறையினரான ஸ்வாமி ராமானந்தரின் வழித்தோன்றலான நரஹரி தாசர் கனவில் ஓர் அநாதைச் சிறுவன் வந்தான். அவனைக் கண்டுபிடித்து, அமரகாவியமான ராமாயணத்தை அவனுக்குக் கற்பிக்கும்படி உத்தரவாயிற்று.

அதன்படி, அவர் ராம்போலாவை அயோத்திக்கு அழைத்துப் போய் உபநயனம் செய்வித்தார்.

வடுவான ராம்போலா, ஸ்ரீராமனை நமஸ்கரித்தபோது, துளசிச் செடியிலிருந்த ஓர் இலை அவன் தலைமேல் விழுந்தது ! அன்றுமுதல் ராம்போலா துளசிதாசர் ஆனார்.

சரயூ மற்றும் காக்ரா நதிகளின் சங்கமத்தில் உள்ள கிராமமாகிய சுகர் க்ஷேத்திரத்தில் துளசி தாசர் தங்கிய காலகட்டத்தில் ஸேஷநாதர் என்னும் சாது, துளசிதாசரை காசிக்கு அழைத்து வந்தார். அவருடைய குருகுலத்தில் 15 வருடம் தங்கி, சமஸ்கிருதம், வேத வேதாங்கம் மற்றும் ஏனைய பாடங்களைக் கற்றார் துளசிதாசர்.

இதன்பின்னர், தான் பிறந்த ஊரான ராஜ்பூருக்கே திரும்பினார். பிரபல ஜோதிடர் தீனபந்து பாடகரின் மகளான ரத்னாவளி இவர் மனைவியானாள். இளம் தம்பதியர், கிராமத்தில் எளிய வாழ்க்கை நடத்தினர். ரத்னாவளி படிப்பு, அறிவு, பண்பு இவற்றுடன் நல்ல அழகியும்கூட ! தன் மனைவியை அளவுக்கதிகமாக நேசித்தார் துளசிதாசர்.

இதனால், சுமார் 12 ஆண்டுகளுக்குத் தன் பிறந்த வீட்டுக்கே போகவில்லை ரத்னாவளி. அவர்களுக்குப் பிறந்த தாரகன் என்ற ஆண்குழந்தை, குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டது. ஒருமுறை தன் தந்தை இறந்ததற்காக ரத்னாவளி, துளசிதாசர் வெளியூர் போயிருந்த சமயம் பிறந்த வீட்டுக்குப் போனாள். அந்த நேரம் பார்த்து ஊர் திரும்பிய துளசிதாசர், மனைவியை உடனே காண விழைந்தார். வெள்ளம் கரைபுரண்டோடிக் கொண்டிருந்த யமுனையாற்றைக் கடந்து, மாமனார் வீட்டை அடைந்தார்.

நள்ளிரவில் தன் கணவரைக் கண்ட ரத்னாவளிக்கோ ஆச்சரியம், பயம், வெட்கம் எல்லாம் ஒருங்கே தாக்கின. அவள் துளசிதாசரிடம், "எலும்பு, மாமிசம், மஜ்ஜைகளாலான மனிதப் பிறவி நான். என்மேல் தாங்கள் வைத்துள்ள ப்ரேமையை பகவான் ஸ்ரீராமன்பால் செலுத்தினால், அவர் உங்களைப் பிறவிக்கடலிலிருந்து கரை சேர்ப்பார்" என்றாள்.

இந்தச் சின்ன சம்பவம், துளசிதாசரின் அகக் கண்ணைத் திறந்தது. அவர் மனதில் ஆன்மிக விளக்கு சுடர்விட்டு எரியலாயிற்று. அதன் பின் வீடு வாசல்களைத் துறந்து, ப்ரயாகைக்கு வந்து சந்நியாசி ஆனார் துளசிதாசர். ராமாயண உபன்யாசம் செய்தார்.

துளசிதாசர் தினமும் கங்கையில் காலைக் கடன்களை முடித்துத் திரும்பும்போது, சொம்பில் இருந்த நீரை வழியில் இருந்த ஆலமரத்துக்கு ஊற்றிவிட்டு வருவாராம். இவ்விதம் பல காலம் புனித கங்கையினால் ஜல தர்ப்பணம் பெற்று, அந்த மரத்தில் வசித்துவந்த பிரம்மராக்ஷஸன் முக்தியடைந்தான். துளசி தாசருக்கு தன் நன்றியைத் தெரிவிக்க, அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்தான்.

துளசிதாசர், ஸ்ரீராமனின் தரிசனம் செய்து வைக்கும்படி கோரினார். அது தன்னால் ஆகாத காரியம் என்று சொன்ன பிரம்மராக்ஷஸன் ஆஞ்சனேயரை அணுகும்படி சொன்னான். ஹனுமான்

ராம கதை கேட்க வருவார் என்றும், அவரை அடையாளம் காண்பது எப்படி என்பதையும் விளக்கினான் அந்த பிரம்ம ராட்ஷசன், அவ்வாறே துளசிதாசரும் மாருதியை அணுகி, ராம தரிசனம் வேண்டினார்.

ஹனுமார் சொல்படி, சித்ரகூடத்துக்குப் போய் அங்கு ராம்காட்டில் வசிக்கலானார். வரும் பக்தர்களுக்கு சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணியைச் செய்து வந்தார். ஒருமுறை மௌனீ அமாவாசையன்று ராமன் சிறுவனாக வந்து, துளசிதாசரிடம் சந்தனம் கேட்டாராம்!

ராம தரிசனத்தால் மெய்மறந்துபோன துளசி தாசர் சமாதி நிலையில் இருந்ததால், ஸ்ரீராமனே அவர் நெற்றியில் திலகமிட்டுவிட்டு மறைந்து போனார்! ஸ்ரீராம தரிசனத்தினால் புனிதரான துளசிதாசர் அம்மையப்பரான சிவ பார்வதியரின் ஆணையை ஏற்று, அயோத்திக்கு வந்து கி.பி. 1575ஆம் ஆண்டு ராம நவமியன்று, ராம சரித மானஸம் எழுதத் தொடங்கினார்.

ஹிந்தியின் கிளையான அவதி மொழியில் எழுதப்பட்ட இந்தக் காவியம் இரண்டு வருஷம், ஏழு மாதம், இருபத்தாறு நாட்களில் ஸீதா ஸ்வயம்வரத்தின் ஆண்டுவிழா நாளன்று முடிவடைந்தது !

துளசி ராமாயணம் என்று அழைக்கப்படும் ராமசரித மானஸம், ஆத்யாத்ம ராமாயணத்தின் மாதிரியில் அமைந்துள்ளது. மற்ற ராமாயணங்கள் போலவே காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீராமனுடைய மானுட லீலைகளைச் சொல்லவும், தன் ஆத்ம சந்தோஷத்துக்காகாவுமே இதை எழுதினார் துளசிதாசர். இதில் ராமன், பரதன், அகல்யை, சபரி போன்றவர்கள் ஆதர்ஸத்தின் சிகரம் என்றால், ஹனுமான் பக்தியின் ஹிமாலயம்.

இதனாலேயே இந்த க்ரந்தம் எல்லா மனிதர்களையும் கவர்ந்திழுக்கிறது முக்குணங்களையும் கடந்து நிற்கும் ப்ரம்ம தத்துவத்தை, பாமரனும் புரிந்துகொள்ளும் வகையில் இயற்றப்பட்டுள்ள ராமசரித மானஸம் ஒரு ஞானப் பொக்கிஷமாக போற்றப்படுகிறது.

துளசிதாசர் எழுதிய ராமாயணத்தின் எளிமையான தன்மையால் உலக நாடுகள் பலவற்றில் புகழ் பெற்று விளங்குகிறது துளசிராமாயணம்.





# பக்தியை மறைக்கும் ஆணவம்

## அர்ஜுனனின் தேர் கொடியில் அனுமன் தோன்றிய கதை



அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் வேண்டி தவம் செய்ய சென்று கொண்டிருந்தபோது, ஒரு நதிதீரத்தில் அனுமன் தனது சுய உருவை மறைத்து ஒரு சாதாரண வானரம் போல உருக்கொண்டு அமர்ந்து "இராமநாமம்" ஜபம் செய்து கொண்டிருப்பதை பார்க்கிறான்.

அனுமன் என்று தெரியாமல் அவரை வம்பிழுக்கும் நோக்கத்துடன் அவரிடம் சென்று, "ஏய் வானரமே உன் இராமனுக்கு உண்மையில் திறன் இருந்திருந்தால் வில்லினாலேயே பாலம் கட்டியிருக்கலாமே ஏன் வானரங்களை கொண்டு பாலம் கட்டினார்?" என்றான் எகத்தாளமாக.

தியானம் களைந்த அனுமன், எதிர் நிற்பது அர்ஜுனன் என்பதை உணர்ந்து கொள்கிறார். அவன் கர்வத்தை ஒடுக்க திருவுள்ளம் கொள்கிறார்.

"சரப்பாலம், என் ஒருவன் பாரத்தையே தாங்காது எனும்போது எப்படி ஒட்டு மொத்த வானரங்களின் பாரத்தையும் தாங்கும்?"

"ஏன் முடியாது நீ நின்றால் தாங்கும்படி இந்த நதியின் குறுக்கே நான் ஒரு பாலம் கட்டுகிறேன். நீயல்ல எத்தனை வானரங்கள் அதில் ஏறினாலும் அந்த பாலம் உறுதியாக நிற்கும்" என்கிறான் கர்வத்துடன் அர்ஜுனன்.

தனது காண்டீபத்தின் சக்தி மேல் அபார நம்பிக்கை கொண்டிருந்த அர்ஜுனன், "பந்தயத்தில் நான் தோற்றால், வேள்வித் தீ வளர்த்து அதில் குதித்து உயிர் துறப்பேன்" என்கிறான்.

"நான் தோற்றால், என் ஆயுளுக்கும் உனக்கு அடிமையாக உன் தேர்க்கொடியில் இடம்பெறுவேன்" என்கிறான் அனுமன்.

அர்ஜுனன் சரப் பாலத்தை கட்டத் துவங்கினான். அனுமன் ஒரு ஓரத்தில் அமர்ந்து இராமநாமம் ஜெபம் செய்யத் தொடங்கினான்.

அர்ஜுனன் பாலத்தை கட்டி முடித்ததும், அனுமன் அதன் மீது ஏற தனது காலை எடுத்து வைத்தது தான் தாமதம், பாலம் தகர்ந்து சுக்குநூறானது. அனுமன், ஆனந்தக் கூத்தாட அர்ஜுனன் வெட்கித் தலைகுனிந்தான்.

"பார்த்தாயா என் இராமனின் சக்தியை?" என்கிறான் அனுமன் கடகடவென சிரித்தபடி.

தனது வில் திறமை இப்படிபோயாகிப் போனதே என்ற வருத்தம் அவனுக்கு. "போரில் வெற்றி பெற பாசுபதாஸ்திரத்தை தேடி வந்த நான், தேவையின்றி ஆணவத்தால் ஒரு வானரத்திடம் தோற்று விட்டேனே நான் உயிர் துறந்தால் என் சகோதரர்களை யார் காப்பாற்றுவார்கள்ஞ் கிருஷ்ணா என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறியவாறு சொன்னது



ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகமலர் மெயில் புக்

போலவே வேள்வித் தீ வளர்த்து அதில் குதித்து உயிர் துறக்க எத்தனித்தான். அனுமன் தடுத்தபோதும், தனது பந்தயத்திலிருந்து பின்வாங்க அவன் தயாராக இல்லை.

அர்ஜூனன் குதிக்க எத்தனித்தபோது, "என்ன நடக்கிறது இங்கே என்ன பிரச்சனை?" என்று ஒரு குரல் கேட்டது. குரல் கேட்ட திசையில், ஒரு அந்தணர் தென்பட்டார்.



இருவரும் அவரை வணங்கி, நடந்ததை கூறினார்.

"பந்தயம் என்றால் சாட்சி என்ற ஒன்று வேண்டும். சாட்சியின்றி நீங்கள் பந்தயத்தில் ஈடுபட்டதால் அது செல்லாது. மற்றொருமுறை நீ பாலம் கட்டுஞ் மற்றொருமுறை இந்த வானரம் அதை உடைத்து நொறுக்கட்டும்ஞ் பிறகு முடிவு செய்துகொள்ளலாம்யார் பலசாலி என்று" அந்த ணர் கூற இருவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

இரண்டாவதுமுறை கட்டுவதால் மட்டும் என்ன மாற் றம் நிகழ்ந்துவிடப்போகிறது என்று கருதிய அர்ஜூனணன் கிருஷ்ணனரை நினைத்துக் கொண்டு "கிருஷ்ண, கிருஷ்ண" என்று சொல்லியபடி பாலம் கட்டினான்.

தன் பலம் தனக்கே தெரியாது அனுமனுக்கு. இருப்பினும் முதல்முறை பாலத்தை உடைத் திருந்தபடியால், கர்வம் தலைக்கு ஏறியிருந்தது. இம்முறை இராம நாம ஜெபம் செய்யவில்லை.

அர்ஜூனன் பாலம் கட்டியவுடன் அதில் ஏறுகிறார் நிற்கிறார் ஓடுகிறார் ஆடுகிறார் பாலம் ஒன்றும் ஆகவில்லை.

"பார்த்தாயா எங்கள் கண்ணனின் சக்தியை? நீயே சொல் யார் இப்போது பெரியவர்? எங்கள் கண்ணன் தானே?"

அர்ஜூனனின் கேள்வியால் அனுமனுக்கு குழப்பம் ஏற்படுகிறது. அங்கே சாட்சியாக நின்றுகொண்டிருந்த அந்தணரை நோக்கி வந்து "யார் நீங்கள்?" என்று கேட்கிறார்.

அந்தணரின் உருவம் மறைந்து அங்கு சங்கு சக்ரதாரியாக பரந்தாமன் காட்சியளிக்கிறார். இரு வரும் அவர் கால்களில் வீழ்ந்து ஆசி பெற்றனர்.

"நீங்கள் இருவருமே தோற்கவில்லை. ஜெயித் தது கடவுள் பக்தியும் நாம ஸ்மரணையும் தான். அர்ஜூனன் முதல் தடவை பாலம் கட்டும்போது, தன்னால் தான் எல்லாம் நடக்கிறது என்கிற அகந்தையில் என்னை மறந்து பாலம் கட்டினான். அனுமன் தனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று இராம நாமத்தை ஜபித்தான். இராம நாமம் தோற்காது. எனவே முதல் முறை அனுமன் வென்றான். இரண்டாம் முறை, அகந்தை ஒழிந்த அர்ஜூனன் என்னை நினைத்தபடி பாலம் கட்டினான். அனுமன், தன் பலத்தாலே தான் வென்றோம் என்று கருதி இராமநாமத்தை மறந்தான். எனவே இரண்டாம் முறை அர்ஜூனன் வென்றான். எனவே இருமுறையும் வென் றது நாம ஸ்மரணையே தவிர நீங்கள் அல்ல!!" என்றார்.

கர்வம் தோன் றும்போது கட மையும் பொறுப் புக்களும் மறந்து விடுகின்றன எனவே தான் சும்மா இருந்த அனுமனை சீண்டி பந்தயத்தில் இறங்கினான் அர்ஜூனன்.

"உங்கள் இருவருடைய பக்தியும் அளவுகடந்தது, சந்தேகமேயில்லை. ஆனால், இறைவன் ஒருவனே என்பதை உணர மறந்துவிட்டீர்கள். அதை உணர்த்தவே இந்த சிறிய நாடகம். மேலும் அர்ஜூனா, இந்த வானரன் வேறு யாருமல்ல, சிரஞ்சீவி அனுமனே!"

உடனே அனுமன் தனது சுய உருவைக் காட்டுகிறார். அர்ஜூனன், அவரின் கால்களில் வீழ்ந்து மன்னிப்பு கேட்கிறான்.

அனுமனை நோக்கி திரும்பிய கிருஷ்ணர், "ஆஞ்சநேயா, பாரதப்போரில் அர்ஜூனனுக்கு உன் உதவி தேவை. நீ போர் முடியும்வரை அவன் தேர் கொடியில் இருந்து காக்கவேண்டும். அதன் பொருட்டே இந்த திருவிளையாடலை நிகழ்த்தினேன். நீ இருக்கும்வரை அந்த இடத்தில எந்த மந்திர தந்திரங்களும் வேலை செய்யாது!"

"அப்படியே ஆகட்டும் பிரபோ!" என்று அவரிடம் மறுபடியும் ஆசிபெற்றார் அனுமன்.

பாரதப் போரில் அர்ஜூனனின் தேரில் அனுமன் உருவத்துடன் கொடி பறக்கவிடப்பட்டது.





# தன்வந்திரி ரூபமாக திகழும்
# தீபாவளி மருந்து

நமது முன்னோர்கள் தீபாவளி கொண்டாட்டத்திற்கு பலகாரங்கள் செய்யும் போதே கூடவே தீபாவளி மருந்து என்று ஒன்றை செய்வார்கள். இந்த பாரம்பரிய மருந்து இன்று பலருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதை பற்றி கேள்விப்பட்டிருக்க கூட வாய்ப்பு இல்லை. உடலுக்கு மிகவும் சிறந்த இந்த மருந்து.

தீபாவளி அன்று ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு தெய்வங்கள் அருள்பாலிப்பார்கள் எண்ணெயில் லட்சுமிதேவியும், அரப்புப் பொடியில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமிதேவி யும், குங்குமத்தில் கவுரியும், புஷ்பத்தில் மோகினிகளும், தண்ணீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும், இனிப்பு பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்புப் பொறிகளில் ஜீவாத்மாவும் நமக்கு அருள்பாலிப்பார்கள்.

இந்த வகையில் தன்வந்திரியின் அருள் தீபாவளி மருந்தில் இருப்பதாக ஐதீகம். தீபாவளி அன்று காலையில் எண்ணை தேய்த்துக் குளித்துவிட்டு பலகாரங்களை தின்பதால் தொண்டை கட்டு வரும். அதில்லாமல் வயிற்றில் அஜீரணம் ஏற்படும். மேலும் பட்டாசு புகையினாலும் சிலருக்கு சளி பிடிக்கும். இதனைத் தவிர்க்கத்தான் தீபாவளி மருந்து அல்லது லேகியம் தயாரிக்கப்படுகிறது. இந்த லேகியத்தை குளித்து விட்டு வந்து ஒரு உருண்டை வாயில் போட்டுக் கொள்ள வேண்டும். இந்த லேகியம் ரெடி பண்ண நேரமில்லாதவர்கள் ஓமம், சுக்கு, வெல்லம் தலா ஒரு கரண்டி எடுத்து பொடி செய்து தேன் கலந்து சிறு சிறு உருண்டைகளாக பிடித்து ஆளுக்கு ஒன்று சாப்பிட தீபாவளி லேகியம் சாப்பிட்ட பலன் கிடைக்கும்.

தீபாவளி மருந்து தயாரிக்க தேவையானவை:

தணியா : 4 கப்

இஞ்சி : 200 கிராம்

ஓமம் : 100 கிராம்

சுக்கு, மிளகு, திப்பிலி : தலா 10 கிராம்

வெல்லம் 100 கிராம்: (துருவிக் கொள்ளவும்)

பொடித்த ஏலக்காய் 5 கிராம்:

நெய் : 1/4 கப்

செய்முறை:

❍ தணியாவையும், சீரகத்தையும் நீரில் அரை மணி நேரம் ஊற வைக்கவும்.

❍ இளசாக இருக்கும் இஞ்சியாகப் பார்த்து வாங்கவும். இஞ்சியை நன்கு சுத்தம் செய்து தோலை நீக்கி சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.

❍ மிக்சியில் அல்லது அம்மியில் இஞ்சியை நன்கு அரைத்துக் கொள்ளவும்.

❍ ஊற வைத்த தணியாவையும், சீரகத்தையும் இஞ்சியுடன் சேர்த்து அரைக்கவும்.

❍ கலவை நன்றாக அரைந்து விழு தாக ஆனதும் அதில் வெல்லத்தை பொடி செய்து கலக்கவும்.



❍ அடுப்பில் கடாயை வைத்து விழுதை அதில் போட்டு நன்கு கிளறவும்.

❍ பின்னர் அதில் நெய்யை விட்டு கிளறிக் கொண்டே இருங்கள். லேகியம்பதத்திற்கு வந்ததும் இறக்கி உலர்ந்த பாத்திரத்தில் பத்திரப்படுத்துங்கள்.

❍ இதனை அனைவரும் சாப்பிடலாம். பலகாரங்களால் வயிற் றுக்கு ஏற்பட்ட பிரச்சினை களை இந்த லேகியமே சரி செய்து விடும்.

# அர்ச்சனைப் பூக்களின் பலன்கள்

அல்லிப்பூ செல்வம் பெருகும்
பூவரசம்பூ உடல் நலம் பெருகும்
வாடமல்லி மரணபயம் நீங்கும்
மல்லிகை குடும்ப அமைதி
செம்பருத்தி ஆன்ம பலம்
காசாம்பூ நன்மைகள்
அரளிப்பூ கடன்கள் நீங்கும்
அலரிப்பூ இன்பமான வாழ்க்கை
செம்பருத்தி ஆன்ம பலம்
ஆவாரம் பூ நினைவாற்றல் பெருகும்
கொடிரோஜா குடும்ப ஒற்றுமை
ரோஜா பூ நினைத்தது நடக்கும்
மருக்கொழுந்து குலதெய்வம் அருள்
சம்பங்கி இடமாற்றம் கிடைக்கும்
செம்பருத்தி பூ நோயற்ற வாழ்வு
நந்தியாவட்டை குழந்தை குறை நீங்கும்
சங்குப்பூ (வெள்ளை) சிவப்பூஜைக்கு சிறந்தது
சங்குப்பூ (நீலம்) விஷ்ணு பூஜைக்கு சிறந்தது

மனோரஞ்சிதம் குடும்ப ஒற்றுமை, தேவ ஆகர்ணைம்

தாமரைப்பூ செல்வம் பெருகும் அறிவு வளர்ச்சி பெறும்

நாகலிங்கப்பூ லட்சுமி கடாட்சம், ஆரோக்யம்

முல்லை பூ தொழில் வளர்ச்சி, புதிய தொழில்கள் உண்டாகும்

பட்டிப்பூ (நித்திய கல்யாணி பூ) முன்னேற்றம் பெருகும்

தங்க அரளி (மஞ்சள் பூ) குருவின் அருள், பெண்களுக்கு மாங்கல்ய பலம் கடன்கள் நீங்கும், கிரக பீடை நீங்கும்

பவள மல்லி இது தேவலோக புஷ்பமாகும். இந்த செடியினை வீட்டில் வளர்ப்பது மிக அவசியமாகும். இதன்மூலம் தேவர்களினதும், ரிஷிகளினதும் அருளும், ஆசியும் கிடைக்கும்.

பழைய புஷ்பங்கள், மலராத மொட்டுக்கள், தூய்மை இல்லாத பூக்களைக் கொண்டு இறைவனிற்கு அர்ச்சனை செய்யக்கூடாது.

அரச்சனை செய்த பூக்கள் கோவிலில் சாமிக்கு போட்ட மாலைகள் காலில் மிதிபடாதவாறு போட வேண்டும். முடிந்தால் தூய்மையான ஓடுகின்ற தண்ணீரில் விடலாம். அல்லது தூய்மையான இடத்தில் குழி தோண்டி போட்டு மூடி விடலாம்.







# நட்சத்திர குறியீடுகள்

## வெற்றி தருமா?

ஜோதிட சாஸ்திரத்தில் இருபத்தியேழு நட்சத்திரங்களுக்கும் உருவம் அல்லது குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை நாம் வெற்றி சின்னங்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். எப்படி யென்றால், நாம் வசிக்கும் வீடு, பணிபுரியும் இடம், அணியும் ஆடை, அறிமுக முகவரி அட்டை (visiting card), கடித முகவரி ஏடு (Letter pad) இவைகளில் அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய உருவத்தை சின்னங்களாக பயன்படுத்திவந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம். இதற்கு புராண இதிஹாசங்களில் ஆதாரம் இருப்பதை ஒருசிலர் ஆதாரமாக கூறியுள்ளனர்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஜென்ம நட்சத்திரம் ரோஹிணியாகும். ரோஹிணி நட்சத்திரத்தின் உருவம் தேராகும். ஸ்ரீகிருஷ்ணர் தேரோட்டியாக இருந்து பாண்டவர்களுக்கு மஹாபாரதப்போரில் வெற்றி தேடித்தந்தார்.

பகவான் ஸ்ரீராமரின் ஜென்ம நட்சத்திரம் புனர்பூசமாகும். புனர்பூசம் நட்சத்திரத்தின் உருவம் வில்லாகும். ஸ்ரீராமர் வில்லேந்தி ராவணனை வெற்றி கொண் டார்.

பகவான் ஸ்ரீவாமனரின் ஜென்ம நட்சத்திரம் திருவோணமாகும். திருவோணம் நட்சத்திரத்தின் உருவம் மூன்று பாதச்சுவடுகள் என கூறப்படுகிறது. ஸ்ரீவாமனர் ஈரேழு உலகையும் ஈரடியாய் அளந்து மூன்றாவது அடியை மஹாபலி சக்கரவர்த்தியின் தலையில் வைத்து அவன் கர்வத்தை அடக்கினார்.எனவே ஸ்ரீவாமனருக்கு உலகளந்த பெருமாள் என்னும் நாமம் உண்டு.

ஸ்ரீஅனுமனின் ஜென்ம நட்சத்திரம் மூலமாகும். மூலம் நட்சத்திரத்தின் உருவம் சிங்கத்தின் வால் என ஜோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.அனுமன் கையிலிருக்கும் ஆயுதம் சிங்கத்தின் வால் போன்ற வடிவத்தில்தான் இருக்கும்.

ஸ்ரீருத்திரனின் ஜென்ம நட்சத்திரம் திருவாதிரையாகும். திருவாதிரை நட்சத்திரத்தின் உருவம் மண்டையோடு என ஜோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீருத்திரன் மண்டையோடுகளை மாலையாக அணிந்திருப்பவன்.

மேற்கண்ட புராண, இதிஹாச தகவல்களின் மூலமாக நாம் அறிந்துகொள்வது என்னவென்றால் நட்சத்திர உருவங்கள் அல்லது சின்னங்கள் நமக்கு வெற்றிதரும் சின்னங்களாகும். அவர வர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய உருவத்தை, தன்னோடு வைத்திருந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம்.



# உடல்நலத்திற்கு பல்வேறு நன்மை அளிக்கும் தயிர்



பலருக்கு தயிர், மோர் போன்றவை பிடிக்காது. நான் இவைகளை எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று பெருமையாக சொல்வார்கள்.!!!

சிலருக்கு தயிர் இல்லாமல் ஏதுமில்லை. அவ்வாறு தயிரை தினம் எடுத்துக் கொள்பவர் களை "தயிர்சாதம்" என்று பலர் கேலியும் கிண்டலும் செய்வது வழக்கம். ஆனால் கேலியும் கிண்டலும் செய்பவர்களைவிட தயிரை தினமும் எடுத்துக் கொள்பவர்கள், உடல் அளவிலும் மன அளவிலும் எல்லாவிதத்திலும் சிறப்பானவர்களாக இருப்பார்கள்.

தயிர் நம் உடலுக்கு ஒரு அரு மருந்து. குளிர்ச்சியைத் தரும். நல்ல ஜீரண சக்தியை தருவது தயிர்தான்.

பால் சாப்பிட்டால் ஒரு மணி நேரம் கழித்து 32% பால்தான் ஜீரணமாகியிருக்கும்.

ஆனால், தயிர் சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில் 91% உடனே ஜீரணிக்கப்பட்டிருக்கும்.

பாலில் ளாக்டோ இருக்கிறது. தயிரில் இருப்பது ளாக்டொபஸில். இது ஜீரண சக்தியை தூண்டி வயிற்றின் உபாதைகளை சரி செய்கிறது.

வயிறு சரியில்லாத பொழுது வெறும் தயிர் சோறு மட்டுமாவது உணவாக உட்கொள்ளச் சொல்லி மருத்துவர்கள் சொல்வார்கள்.

பால் கூட வயிற்றை மந்தமாக்கி ஜீரண சக்தியை குறைக்கும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் தயிர் அப்படி அல்ல.

அதிகமாக வயிற்றுபோக்கு ஏற்படும் பொழுது வெந்தயம் + தயிர் 1 கப் சாப்பிட்டால் வயிற்று பொருமல் அடங்கும்.

பாலைதிரித்து உருவாக்கபடுவதுதான் பனீர்.

பிரியாணி போன்று உடலுக்கு சூடு தரும் உணவுவகைகளை சாப்பிடும்பொழுது வயிற்றுக்கு அதிகம் கேடு விளைவிக்காமல் இருக்கத்தான் தயிர் ரயித்தா சாப்பிடுகிறோம்.







மெனோபாஸ் பருவத்தை எட்டப் போகும் பெண்களுக்கு தயிர் மிகவும் உபயோகமாகிறது. உடலுக்குத் தேவையான அதிக கால்சியத்தை தயிர் வழங்குகிறது.

தயிரில் முக்கியமான வைட்டமின் சத்துகளும், புரதச் சத்துகளும் அடங்கியுள்ளது. கால்சியமும், ரிபோ ப்ளேவின் என்ற வைட்டமின் `பி' யும் தயிரிலிருந்தே பெறப்படுகிறது.

தயிரில் உள்ள புரோட்டீன், பாலில் உள்ள புரோட்டீனை விட சீக்கிரமாகவே ஜீரணமாகிவிடும். பாலை உட்கொண்ட ஒரு மணிநேரத்தில் 32 சதவீத பால் மட்டுமே ஜீரணப் பாதையில் செல்கிறது. ஆனால் தயிரோ 91 சதவீதம் ஜீரணமாகி விடும். இதனால் ஏற் படும் நன்மைகள் சில

1. பாலைத் தயிராக மாற்றும் பாக்டீரியா குடலில் உருவாகும் நோய் கிருமி பாக்டீரியாவின் வளர்ச்சியை தடுக்கிறது. தயிரில் இருக்கும் பாக்டீரியா ஜீரண சக்தியை அதிகரிக்கும் நன்மை செய்யும் பாக்டீரியாவை உருவாக்குகிறது.
2. ஒரு கை நிறைய தயிரை எடுத்து தலையில் நன்றாக தேய்த்தால் தூக்கம் நன்றாக வரும்.
3. சூரிய ஒளியில் பாதிக்கப்படும் நரம்பு களையும், தோல் பகுதிகளையும், தயிர் தனது ஆரோக்கியமான கலவைகளால் பாதுகாக்கிறது. பழச்சாறு உடலுக்குத் தேவையான வைட்டமின் `சி'யை அளிக் கிறது. தயிரும் பழச்சாறுக்கு இணையான சத்துக்களைக் கொண்டுள்ளது.
4. மலச்சிக்கல் மற்றும் வயிற்றுப்போக்கு போன்றவற்றிற்கும் தயிர் தான் சிறந்த மருந்து.
5. அப்ரண்டீஸ் மற்றும் வயிற்றுப் போக்குக்கு காரணமாகும் கிருமிகள் தயிர், மோரில் உள்ள லேக்டிக் அமிலத்தால் விரட்டி யடிக்கப்படும். மஞ்சள்காமாலையின் போது தயிரிலோ, மோரிலோ சிறிதளவு தேனைக் கலந்து உட்கொள்வது சிறந்த உணவு முறையாகும்.
6. மலம் கழித்த பிறகு சிலருக்கு மலக்குடலில் எரிச்சல் ஏற்படும். தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கொண்டு இதை குணப்படுத்தலாம்.
7. சில தோல் வியாதிகளுக்கு மோரில் நனைந்த துணியை பாதித்த இடத்தில் கட்டி வருவது சிறந்த மருந்தாகும். தோல் வீக்க நோய்க்கு மோர் கட்டு அருமையான மருந்தாகச் செயல்படுகிறது.

## நீங்களும் மருத்துவர் ஆகலாம்!!!

- வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி, பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி நீங்கும்.
- பொடித்த படிகாரத்தை தூள் செய்து அதைக் கொண்டு வாரம் மூன்று முறை பல் தேய்த்து வந்தால் பற்களின் கறை, இரத்தம் வடிதல், வாய் துர்நாற்றம் நீங்குவதோடு பல் ஈறுக்கும் வலு கொடுக்கும்.
- வயிற்றுப் போக்கு அதிகமாக இருந்தால் ஜவ்வரிசியை சாதம் போல வேகவைத்து மோரில் கரைத்து உப்பு போட்டு சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு நின்றுவிடும். வயிற்றில் வலியும் இருக்காது.





# பலவகையான தீபாவளி

## இரண்டுவிதமாக கொண்டாடும் அதிசயம்

வெளிச்சத்தின் அருமை இருட்டில் தான் தெரியும். இருட்டில் தடுமாறும்போது, எங்கிருந்தாவது ஒளிராதா என தவிக்கிறோம். மனம் கவலையில் மூழ்கி சோகத்தால் இருண்டிருக்கும். அப்போது தீப ஒளி என்னும் நல்வழி தோன்றாதா! அதன் நடுவே நாம் குதூகலத்துடன் இருக்கமாட்டோமா என எண்ணுகிறோம்.

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ஒவ்வொரு கர்மாவிற்குள் மூழ்கி இருக்க வேண்டும் என்பதுதான் எழுதப்படாத விதியாக உள்ளது. அப்படி குறிப்பிட்ட கர்மாவில் மனிதன் இருந்தாலும், இறைத் தொடர்பு, நல்ல செய்கை, நல்ல எண்ணங்கள் போன்றவற்றை மறக்காமல், எந்த மனிதன் தனது கர்மாவை பூர்த்தி செய்கிறானோ அவன் தெய்வத்திற்கு சமம். கர்மா என்பதை எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம், வசதி வாய்ப்பு, ஏழ்மை, பசி, பட்டினி இப்படி எதுவேண்டுமானாலும் ஒரு மனிதனுக்கு நிர்ணயிக்கப்பட்ட கர்மாவாக இருக்கலாம்.

ஒவ்வொரு கர்மாவிற்கும் ஒவ்வொரு பலன் உள்ளது. வறுமை, பசி, பட்டினி போன்றவற்றில் உழன்றாலும், தெய்வ பக்தி, நேர்மை, நல்ல எண்ணம், போன்றவை உள்ள மனிதன் தெய்வத்திற்கு சமமாக கருதப்படுவான். பொன்,பொருள், வசதி, வாய்ப்பு ஏனையவை அதிகம் இருந்தும் நல்ல எண்ணமும், மற்றவருக்கு உதவும் மனப்பான்மை இன்றி, இன்னும் பொன் பொருள் சேர்ப்பதிலேயே குறியாக இருந்தால் அவன் சாத்தானைவிட கொடூரமானவனாக கருதப்படுவான். இறக்கும் போது அவன் சேர்த்த சொத்து அவனைக் காப்பாப்பாற்றாது. ஆனால் அவன் செய்த நல்லசெயல்கள் அவனுடன் துணைக்கு செல்லும், இதை உணர்த்ததான் புராணங்கள், இதிகாசங்கள், நன்னெறி நூல்கள் போன்றவை இந்து சமயத்தில் படைக்கப்பட்டதன் நோக்கமாகும்.

இது போன்ற புராணங்கள் கூறும் கருத்தை மக்கள் மறக்காமல் இருக்கவே வருடம் தோறும் ஏதோ ஒருவிதத்தில், ஒரு பண்டிகையின் வடிவில் இந்து மதத்தில் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்துக்களின் பண்டிகைகளில் மிக உயர்ந்த பண்டிகைதான் தீபத் திருநாள் தீபாவளிப் பண்டிகை.

இந்தப் பண்டிகையின் முக்கிய நோக்கமே அகத்திலும், புறத்திலும் உள்ள கெட்ட எண்ணங்களை விட்டு விட்டு, தூய்மையான எண்ணத்துடன் மனித மனம் புத்தொளி பெற வேண்டும் என்பதே. இதை உணர்த்தவே அரக்கர்களை, தெய்வங்கள் கொன்று உலகில் நீதியை நிலைநாட்டுவதாக இதிகாச புராணங்கள் எடுத்துக் கூறுகிறது.

மேலும் இந்தப் பண்டிகையை கொண்டாட ஒருசில விரதமுறையும், மரண பயத்தைப் போக்கவும், நரகலோகத்திற்கு செல்லாமல் இருக்கவும் முன்னோர்களால் தீபாவளிப் பண்டிகைக்கென்றே சிறப்பு விரதமுறைகள் கையாளப்பட்டிருந்தது.

அதாவது துலா (ஐப்பசி) மாதம் தேய்பிறையில் திரயோதசி அன்று மகாபிரதோஷ பூஜை செய்து, யமதீபம் ஏற்ற வேண்டும். எமதர்ம ராஜாவை

மனதால் பிரார்த்தனை செய்து, அகாலமரணம் சம்பவிக்காமல் காக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். மறுநாள் நரக சதுர்த்தசி அன்று, நரகத்திற்கு செல்லாமல் இருக்கவும், ஏற்கனவே நரகத்தில் துன்பப்படுபவர்கள் அங்கிருந்து விடுபடவும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். எண்ணெய், அரப்புத்தூள், சந்தனம், குங்குமம், மலர்கள், தண்ணீர், புத்தாடை, இனிப்புப்பண்டங்கள், தீபம், இனிப்பு மருந்து, நெருப்புப்பொறி ஆகியவற்றிற்கு பூஜை செய்ய வேண்டும்.

எண்ணெயில் லட்சுமிதேவியும், அரப்புப் பொடியில் சரஸ்வதியும், சந்தனத்தில் பூமிதேவியும், குங்குமத்தில் கவுரியும், புஷ்பத்தில் மோகினிகளும், தண்ணீரில் கங்கையும், புத்தாடைகளில் மகாவிஷ்ணுவும், இனிப்பு மருந்தில் தன்வந்திரியும் (தீபாவளி லேகியம் பற்றியும், அதை தயாரிக்கும் முறைபற்றியும் பக்கம் 23ல் தனியாக கொடுக்கப்பட்டுள்ளது), இனிப்பு பண்டங்களில் அமிர்தமும், தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பு பொறிகளில் ஜீவாத்மாவும் நமக்கு அருள்பாலிப்பார்கள். இவற்றிற்கு கற்பூர ஆரத்தி காட்டி வணங்கினால் அனைவரும் மனம் குளிர்ந்து ஆசி வழங்கி, நம் குடும்பத்தாரை இருளிலிருந்து ஒளிக்கு அழைத்து வருவார்கள் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர்.



### இரண்டு வகையான தீபாவளி:

கெடுதல் அழிந்து நன்மை பிறந்த கதையாக இருந்தாலும், வட இந்தியாவிலும், தென் இந்தியாவிலும் இந்த தீபாவளியை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர்.

### தென் இந்திய மக்கள் தீபாவளி கொண்டாட காரணம் நரகாசுரன்:

தென் இந்தியாவில் இந்த தீபாவளிப் பண்டிகையை நரகாசுரனை மையமாக வைத்து கொண்டாடப்படுகிறது. நரகாசுரன் என்ற ஒரு அரக்கன் இருந்தான். அவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்தான். நரகாசுரனின் உண்மைப் பெயர் பவுமன். திருமால் வராக அவதாரம் எடுத்து பூமியை துளைத்து அசுரர்களை அழிக்கச்சென்ற போது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன். அசுர வதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர சுபாவம் இவனுக்கு இயல்பாக அமைந்து விட்டது. நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் எனப்பட்டான். அப்பெயரே நரகாசுரன் என்றானது.

இதை அறிந்த மகா விஷ்ணு அவனை கொல்ல நினைத்தார். ஆனால் அவன் பூமி தாய்க்கு பிறந்தவன். அவன் தன் தாயை தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாத வரம் பெற்றிருந்தான். எனவே மகா விஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். நரகாசுரனுடன் போரிட்டார்.

அவன் மகா விஷ்ணு மீது அம்பு எய்தினான். இந்த அம்பு பட்டு அவர் மயக்கம் அடைவது போல் கீழே விழுந்தார். இதை பார்த்த சத்தய பாமா கோபம் அடைந்து நரகாசுரனை போருக்கு அழைத்தார். சத்திய பாமா பூமியின் அவதாரம் என்று உணராமல் அவரோடு போர் செய்தான். அன்னையின் அம்புக்கு பலியாகி விழுந்தான்.

அப்போதுதான் அவனுக்கு சத்யபாமா தனது தாய் என்று தெரிந்தது. அப்போது அவரிடம், அம்மா, நான் மறைந்த இந்நாள் மக்கள் மனதில் நிற்க வேண்டும். என்னுடைய பிடியிலிருந்து விடுபட்ட தேவர்களும் மக்களும் இந்த நாளை இனிப்பு வழங்கி வெடி போட்டு கொண்டாட வேண்டும் என்று வேண்டினான்.

மகாவிஷ்ணுவும் சத்யபாமாவும் அவனுக்கு வரம் கொடுத்தார்கள். இதையொட்டி நரகாசுரன் மறைந்து மகிழ்ச்சி பொங்கிய நாள் தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

### வட இந்தியாவில் ராவணனை மையமாக வைத்து கொண்டாடும் தீபாவளி:

தென் இந்தியாவில் நரகாசுரனை அழித்ததால் கொண்டாடப்படும் பண்டியாக தீபாவளி விளங்கினாலும் வடமாநிலங்களில் ராவணனை மையமாக வைத்து தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. சீதாப்பிராட்டியை கடத்திச் சென்ற ராவணனை வதம் செய்துவிட்டு மிதுலைக்கு வந்த ராமரின் வெற்றியை கொண்டாடும் விதமாக வட மாநிலங்களில் தீபாவளி கொண்டாடப்படுகிறது. வால்மிகி ராமாயணத்தில் முதன் முதலாக தீபாவளி பற்றிய குறிப்புகள் உள்ளன.

### அதிசய தீபாவளி:

தீபாவளிப் பண்டிகையை இந்து சமயத்தைச் சார்ந்த பல்வேறு மதங்களான, சமண, சீக்கிய மதத்தினரும் வேறு காரணங்களுக்காக கொண்டாடுகிறனர். தீபாவளி என்றாலே அது ஐப்பசி மாதம்தான் வரும். ஆனால் சில ஆண்டுகளில் அபூர்வமாக புரட்டாசி மாதமே வந்ததுண்டு. 1944, 1952, 1990ஆம் ஆண்டுகளில் புரட்டாசி மாதம் 31ஆம் தேதி தீபாவளி வந்தது.

சீக்கியர்களின் தீபாவளி:

1577 இல் இத்தினத்தில் , தங்கக் கோயில் கட்டுமான பணிகள் துவங்கியதையே சீக்கியர்கள் இந்நாளில் கொண்டாடுகின்றனர் .

### சமணர்களின் தீபாவளி:

சமணர்களின் தீபாவளி சமணர்கள் மகாவீரர் முக்தி அடைந்த புனித தினத்தை நினைவுபடுத்தும் நாளே தீபாவளி.

### தீபாவளி பண்டிகை பற்றிய சில சுவாரஸ்யமான தகவல்கள்:

வாத்ஸ்யாயனர் எழுதிய நூலில் ‘யட்ஷ ராத்திரி’ என்று குறிப்பிட்டிருக்கிறார். இது கார்த்திகை மாதம் அமாவாசை தினத்தன்று இரவில் கொண்டாடப்படுகிறது. இதை ‘சுகராத்திரி’ என்றும் சொல்வதுண்டு.



விஷ்ணு புராணத்தில் தீபாவளியன்று விடியற்காலையில் நீராடி மகாலட்சுமியை பூஜை செய்து தீபங்களை வீட்டில் பல இடங்களில் வைத்தால் லட்சுமி கடாட்சம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கி.பி.1117ல் வாழ்ந்த சாளுக்கிய திருபுவன மன்னன் ஆண்டுதோறும் சாத்யாயர் என்ற அறிஞருக்கு தீபாவளிப் பரிசு வழங்கியதாக கன்னடத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

கி.பி.1250ல் எழுதப்பட்ட லீலாவதி என்ற மராத்தி நூலில் தீபாவளியன்று எண்ணெய் தேய்த்து நீராடுவதைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

### அனைத்து நீர்நிலைகளிலும் கங்கை வாசம் செய்யும் நாள்:

தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுவர். இல்லத்தின் மூத்தஉறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு (மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை) இட்டுமகிழ்வர் . தீபாவளி அன்று வெந்நீரில் குளிக்க வேண்டும். வெந்நீரில் கங்கையிருப்பதாக நம்பிக்கை. கங்கை நம் பாவங்களை போக்குவாள்.தீபாவளி அன்று நல்லெண்ணெயில் ஓமம் மற்றும் மிளகு போட்டுக் காய்ச்சி எடுக்கப்பட்ட எண்ணையை தேய்த்து தான் குளிக்க வேண்டும். தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம், அன்றைய தினம், அதி காலையில் எல்லா இடங்களிலும், தண்ணீரில் கங்கையும், எண்ணெயில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும், குங்குமத்தில் கௌரியும், சந்தனத்தில்பூமாதேவியும், புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாககருதப்படுவதேயாகும். அந்த நீராடலைத்தான் “கங்கா ஸ்நானம்” என்று கூறுகிறார்கள். அன்றைய தினம், எல்லா நதிகள், ஏரிகள், குளங்கள், கிணறுகளிலும், நீர்நிலைகளும் “கங்கா தேவி” வியாபித்து இருப்பதாக ஐதீகம்.

எனவே இந்த தீபாவளித்திருநாளின் சிறப்புகளை அறிந்து நாமும் மகிழ்ச்சியுடன் குடும்பத்துடன் கொண்டாடி இறையருளை பெற்று உடல் அளவிலும் மனதளவிலும் புத்துணர்ச்சியுடன் வாழ்வோம். **அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.**



ஆன்மிக மாதமிருமுறை இதழ்

# எந்த விதத்தில் முடியுமோ அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், 'நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணினபோது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், 'என்னால் இதற்குமேல் பண்ணச் சக்தி இல்லையே!' என்று மனஸார வருத்தப்பட்டு நீளமாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.

முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.



எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வரானுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்






## வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
7299992699 / 8825844033

# சப்த கன்னியர்கள்

சப்தமாதாக்கள் அல்லது சப்தகன்னியர் வழிபாடு என்பது அம்பிகை வழிபாட்டின் அங்கமாகக் காணப்படுகின்ற கிராமிய தெய்வ வழிபாடு ஆகும். சக்தி அம்சத்தில் சப்த மாதர் கள் வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது. கி.பி 510 ஆம் ஆண்டில் சப்தகன்னியர்கள் வழிபாடு சிறப்புற்று இருந்ததாக கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. சப்தகன்னியர்கள் எழு தாய்மார்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

**சப்தகன்னியர்கள் பிறந்த கதை:** அண்ட முண்டர்கள் என்ற அரக்கர்களை அழிக்க வேண்டி மனித கர்ப்பத்தில் பிறக்காமலும், ஆண் பெண் இணைவில் பிறக்காமலும், அம்பிகை எனப்படும் சக்தியின் அம்சத்திலிருந்து உருவானவர்களே இந்த சப்த கன்னிகைகள். அவர்கள் ப்ராம்மி, மகேஸ்வரி, கவுமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி முதலான ஏழு கன்னிகைகள் சப்த மாதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**நம் உடலோடு தொடர்பு கொண்டுள்ளவர்கள்:** சப்தமாதர்களுக்கும் நம் உடலுக்கும் தொடர்பு உள்ளதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. அவை : பிராம்மி தோலுக்கு தலைவி. மகேஸ்வரி நிணத்திற்கு தலைவி. கவுமாரி ரத்தத் திற்கு தலைவி. நாராயணி சீழிற்குத் தேவதை. வாராஹி எலும்பின் தெய் வம். இந்திராணி சதையின் தேவதை. சாமுண்டி நரம்பின் தலைவி.

**ப்ராம்மி:** அம்பிகை யின் முகத்தில் இருந்து உருவானவள் பிராம்மி. மேற்கு திசையின் அதிபதி.கல்விக்கு அதிபதியான சரஸ்வதி என்ற கலைவாணியின் அம்சமாவாள். நான்முகனின் அம்சமாய்த் தோன்றியவள். நான்கு முகங்கள், நான்கு கரங்கள். மஞ்சள் வண்ணம் பிடித்த வண்ணம். கமண்டலம், அக்ஷமாலையைப் பின்னிரு கரங்களில் ஏந்தி முன்னிரு கைகளில் அபயவரதம் காட்டுவாள். ருத்திராக்ஷ மாலை தரித்து அன்னவாகனத்தில் அமர்ந்திருப்பவள்.

மான் தோல் அணிந்திருப்பவள்.ஞானம் தந்து அஞ்ஞானம் நீக்குபவள். இவளது காயத்ரி மந்திரத்தை படிக்கும் மாணவர்கள் தினமும் ஜபித்து வந்தால்,ஞாபக மறதி நீங்கிவிடும். (அசைவம் தவிர்க்க வேண்டும். வீட்டிலும், வெளியிலும் கண்டிப்பாக சாப்பிடக்கூடாது.) ஐ.ஏ.எஸ்., வங்கிப்பணி, அரசுப்பணி முதலானவற்றிற்கு தேர்வு எழுதுபவர்கள் தினமும் 108 முறை மேற்கு நோக்கி ஜபித்துவந்தால் வெற்றி நிச்சயம்.

**வாராஹி:** அம்பிகையின் பிருஷ்டம் பகுதி யிலிருந்து உருவானவள் வராஹி. நமது பிருஷ்டம் பகுதி கழிவுகளை வெளியேற்றுவதும்,உடம்பைத் தாங்குவதும்,ஓய்வு தருவதும் ஆகும். இதன் சக்தியாக பன்றி முகத்தோடு காட்சியளிப்பவள். இவள் அம்பிகையின் முக்கிய மந்திரியாக விளங்குகிறாள். வராஹம் எனப்படும் பன்றியின் அம்சமானது விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகும். இவளுக்கும் மூன்று கண்கள் உண்டு. இது சிவனின் அம்சமாகும். அம்பிகையின் அம்சமாக பிறந்ததால், இவள் சிவன்,ஹரி,சக்தி என்ற மூன்று அம்சங்களைக் கொண்டவளாவாள். எதையும் அடக்க வல்லவள். சப்த கன்னிகைகளில் பெரிதும் வேறுபட்டவள். மிருகபலமும்,தேவகுணமும் கொண்ட இவள் பக்தர்களின் துன்பங்களை தாங்கிக் காப்பவள். பிரளயத்தில் இருந்து உலகை மீட்டவளாகச் சொல்லப்படுகின்றாள். எருமையை வாகனமாக உடையவள்.

கலப்பை, உலக்கை ஆகியவற்றைப் பின்னிரு கரங்களில் தாங்கி அபயவரதம் காட்டுவாள். லலிதாம்பிகையின் படைத்தலைவி இவளே. தண்டினி என்ற பெயருடன் சிம்ஹ வாஹினியாய்க் காட்சி கொடுப்பாள். இவளை வணங்குவோர் வாழ்வில் சிக்கல்கள், தடைகள், தீராத பகைகள் தீரும்.

**மகேஸ்வரி:** அம்பிகையின் தோளில் இருந்து உருவானவள் மகேஸ்வரி. ஈஸ்வரன் இவளது சக்தியால்தான் சம்ஹாரமே செய்கிறார். மகேசனின் சக்தி இவள். முக்கண் படைத்தவள். ஜடா மகுடத்துடன் காட்சியளிப்பாள். மான், மழு ஏந்தி, அபயவரதம் காட்டி நான்கு கரங்களுடன் இருப்பாள். தூய வெண்ணிறமே பிடித்த வண்ணம். வடகிழக்கு என்னும் ஈசானியம் திசையை நிர்வகித்து வருபவள்.

இவளை வழிபட்டால்,நமது கோபத்தைப் போக்கி சாந்தத்தை அளிப்பாள்.இவளது வாகனம் ரிஷபம் ஆகும். அம்பிகையின் இன்னொரு அம்சமாக போற்றப்படுகிறாள்.

**இந்திராணி:** அம்பிகையின் பிறப்புறுப்பிலிருந்து தோன்றியவள் இந்திராணி. இந்திரனின் அம்சம். கற்பகமலர்களை கூந்தலில் சூடியவள். யானை இவளது வாகனம். சொத்து சுகம் தருபவர். உலகத்தின் சகல




www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

உயிர்களும் தோன்ற பெண் பிறப்புறுப்புதான் காரணமாக இருக்கிறது. தன்னை வழிபடுபவர்களின் உயிரைப் பேணுவதும், அவர்களுக்கு நல்ல வாழ்க்கைத்துணையை அமைத்துத் தருவதிலும், மிகவும் தலைசிறந்த அதேசமயம் முறையான காமசுகத்தைத் தருவதும் இவளே!.மணமாகாத ஆண்கள் இவளை வழிபட்டால், அவர்கள் மிகச்சிறந்த மனைவியையும், கன்னிப்பெண்கள் இவளை வழிபட்டால், மிகப்பொருத்தமான கணவனையும் அடைவார்கள்.

இந்திரனின் சக்தியான இவள் ரத்ன மகுடம் தரித்தவள். பொன்னிற மேனி உடையவள். நாற்கரத்தினள். சக்தி ஆயுதமும், வஜ்ராயுதமும் தாங்கி அபயகரம் காட்டுவாள். சத்ரு பயம் போக்குபவள். மாகேந்திரி என்ற பெயரையும் கொண்டவள்.

**கௌமாரி:** கவுமாரி. கவுமாரன் என்றால் குமரன். குமரன் என்றால் முருகக்கடவுள். ஈசனும், உமையாலும் அழிக்க இயலாதவர்களை அழித்தவர்தான் குமரக்கடவுள் எனப்படும் முருகக்கடவுள். முருகனின் அம்சமே கவுமாரி.

இவளுக்கு சஷ்டி, தேவசேனா என்ற வேறு பெயர்களும் உண்டு. மயில் வாகனத்தில் வரு பவள். அஷ்ட திக்கிற்கும் அதிபதி இவளே. கடலின் வயிறு கிழியுமாறு வேற்படையைச் செலுத் திய சக்தி இவள். இவளை வழிபட்டால், குழந்தைச் செல்வம் உண்டாகும். இளமையைத் தருபவர்

**வைஷ்ணவி:** அம்பிகையின் கைகளில் இருந்து பிறந்தவள் வைஷ்ணவி. இவள் விஷ்ணுவின் அம்சம். கருடனை வாகனமாக கொண்டவள். வளமான வாழ்வு தருபவர். சகல சவுபாக்கியங்கள்,செல்வ வளம் அனைத்தையும் தருபவளே வைஷ்ணவி. குறிப்பாக தங்கம் அளவின்றி கிடைத்திட வைஷ்ணவி வழிபாடு மிக அவசியமாகும்.

**சாமுண்டி:** ஈஸ்வரனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய பத்திரகாளியானவள், தனது கோரமான முகத்தை மாற்றி சாமுண்டியாக ஆனவள். இவள் தனது ஆறு சகோதரிகளுடன் சேர்ந்து தாருகன் என்ற அரக்கனை அழித்தாள். பதினாறு கைகள், பதினாறு விதமான ஆயுதங்கள், மூன்று கண்கள், செந்நிறம், யானைத் தோலால் ஆன ஆடையை அணிந்திருப்பவள். சப்தகன்னிகைகளில் முதலில் தோன்றியவள் இவளே! சப்த கன்னிகைகளில் சர்வ சக்திகளையும் கொண்டிருப்பவள். மனிதர்களுக்கு மட்டுமல்ல; தேவர்களுக்கே வரங்களை அருளுபவள் இவளே!

இவளை வழிபட்டால்,எதிரிகளிடமிருந்து நம்மைக் காப்பதோடு,நமக்குத் தேவையான சகல பலங்கள்,சொத்துக்கள்,சுகங்களைத் தருவாள். இனி வேறுவழியில்லை என்ற சூழ்நிலை ஏற்படும்போது, இவளை அழைத்தால், புதுப்புது யுக்திகளைக் காட்டுவதோடு, முடியாததையும் முடித்துவைப்பாள்.

**நீங்கள் குடியிருக்கும் பகுதி, உலக நாடுகளின் அனைத்து பகுதியிலும் உள்ள இந்துக் கோவில்களின் சிறப்புகளைப் பற்றி தொகுத்து வழங்க விருப்பமுள்ள அன்பர்கள் தேவை. ஆன்மிகத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்....**

தொடர்பு கொள்ளவும்: ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில், சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8825844033





## அனைத்து தெய்வமும் அடங்கும்

# ஸ்ரீசக்கரம்

## குலதெய்வம் தெரியாதவர்களுக்கு வரபிரசாதம்



இந்து சமயத்தில் வழிபாட்டு முறைகள் பல இருந்தாலும் யந்திர பூஜை மிகவும் சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியாக யந்திர வழிபாடும் உண்டு. இதன்படி பார்த்தால், கணபதி யந்திரம், முருகன் யந்திரம் போன்று யந்திர பூஜையின் பட்டியல் நீண்டுக் கொண்டே போகும் ஆனால் இந்த யந்திரங்களுக்கெல்லாம் தலையாயது ஸ்ரீ சக்ர யந்திரம், எனவே இதனை யந்திர ராஜம் என்றும் கூறுவார்கள்.

அதுபோல நமது சமய வழிபாடுகளில் அனைத்து மந்திரங்களுக்கும் ஸ்ரீ வித்யா மந்திரமே தலையாயது என்பதால் மந்திர ராஜம் எனும் இவ்வழிபாடு சிறப்பு பெறுகிறது.

சிதம்பரம் பொன்னம்பலத்தில் வீற்றிருக்கும் நடராஜர 14 தடவை தனது டமருகத்தை அடித்து ஒலி எழுப்பினார். முதலில் ஒன்பது தடவையும் பின்னர் ஐந்து தடவையும் மங்கள ஒலி எழுப்பினார்.

ஒன்பது என்பது தேவிக்குரிய நவாக்ஷாரி

ஐந்து என்பது சிவனுக்குரிய பஞ்சாட்சரம்

மேலும் தனது இடப் பாகத்தில் வீற்றிருக்கும் அன்னைக்குரிய இடது காலால் நடராஜர் அருள் பாலிக்கிறார்.

சக்திக்குரிய நவாக்ஷரி மந்திரத்தை முன்னிலைப்படுத்திய நடராஜர், அருள் பாலிப்பது சக்தியின் மூலமே என்பதைப் போல இடது காலை தூக்கி ஆனந்த நடனமாடி அருள்பாலிக்கிறார்.

ஸ்ரீ சக்கர மஹாமேரு என்பது சிவசக்தியின் ஒன்பது கட்டு அரண்மனை. ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் மஹாசாம்ராஜ்யம். இந்த சாம்ராஜ்யத்தில் கணபதி, முருகன் முதல் காளி, பைரவர் வரை அனைத்து தெய்வங்களுக்கும் இடம் உண்டு.

ஸ்ரீ சக்கரத்தை வழிபடும் போது அனைத்து தெய்வங்களையும் ஒரே இடத்தில் வழிபாடு செய்யமுடியும். ஸ்ரீ சக்கரத்தில் வீற்றிருக்கும் தேவி ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் பெருமை பேசும் நுல்கள் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் , சௌந்தர்யலஹரி, தேவி மகாத்மியம், நவரத்தினமாலை, அபிராமி அந்தாதி போன்றவை.



சௌந்தர்யலஹரியின் இரண்டாவது பாடலில் ஆதி சங்கரர் பேசும் போது ஸ்ரீ சக்தியின் திருப்பாதங்களில் இருந்து விழுகின்ற மண் துகள்களை வைத்து பிரம்மா பூலோஹம், புவர்லோஹம், ஸுவர்லோஹம், மஹர்லோஹம், ஜனலோஹம், தபலோஹம், ஸத்யலோஹம் எனும் மேல்லோகங்கள் ஏழையும், அதல, விதல, ஸுதல, ரஸாதல, தலாதல, மகாதல, பாதாளம் எனும் கீழ்லோகங்கள் ஏழையும் ஸ்ருஷ்டித்தார் என்கிறார்.

ஸ்ரீ மகாதேவியின் பாததூளியால் ஆதிசேஷன் உருவெடுத்து பிரம்மா படைத்த பதினான்கு உலகையும் தன் சிரசினால் தாங்கிகொண்டு இருக்கிறார்.

ஸ்ரீ ருத்திரனோ தேவியின் பாததூளியை கையிலெடுத்து “த்ரியம்பக” மந்திரத்தினால் பஸ்ம பொடியாக்கி தன் சிரசு முதல் பாதம் வரை பூசிக்கொண்டார்

பிரம்மனின் சக்தியான சரஸ்வதியும், விஷ்ணுவின் சக்தியான லக்ஷ்மியும் ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரியின் இரு புறமும் நின்று சாமரம் வீசி பணிவிடை செய்கிறார்கள்.

தேவி சிவனை அன்பால் நோக்கியபோது வல்லபை ஸித்தி லட்சுமியுடன் ஸ்ரீகணபதி தோன்றினார். ஸ்ரீ கணபதியும், ஸ்ரீ முருகனும் ஸ்ரீ சக்கரத்தில் அன்னையிடம் பால் அருந்தும் குழந்தைகள் .

ஸ்ரீ சக்ரம் அமைந்திருக்கும் அறையின் வலப்புறம் மகாகாளியும், இடதுபுறம் மகா பைரவரும் துவார சக்திகளாக அன்னைக்கு காவல் புரிகின்றனர்.

நவகிரகங்கள், 27 நட்சத்திரங்கள், 12 இராசிகளும், அன்னையை வலம் வருகின்றனர்.

இவ்வாறாக அனைத்து தெய்வங்களுக்கும் தலைமை பொறுப்பில் வீற்றிருக்கும் மஹா சாம்ராஜ்ய தாயினி அன்னை ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரி அருள்பாலிக்கும் அற்புதமானது ஸ்ரீ சக்ர மஹாமேரு.

ஸ்ரீ மஹாமேருவை தரிசனம் செய்தால் அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் நமக்கு கிடைக்கும்.

குலதெய்வம் தெரியாதவர்களுக்கு ஸ்ரீ சக்ர வழிபாடு ஒரு வரப்பிரசாதம். ஸ்ரீ சக்ரத்தை வழிபட்டால் குலதெய்வம் நிறைவடையும், ப்ரசன்னமாகும். ஸ்ரீ சக்கரத்திற்கு மேலான யந்திரமோ, ஸ்ரீ வித்யைக்கு மேலான மந்திரமோ, ஸ்ரீ லலிதாம்பிகைக்கு மேலான தேவதைகளோ இல்லை என்பது தனி சிறப்பு.

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

# மனிதன் பாதி வானரம் மீதி
# வாழை இலை சாப்பாட்டு தத்துவம்

இராமாயண காலத்தில். ஒரு முறை ராமன் சாப்பிடும்போது, அனுமனையும் தன்னுடன் ஒரே இலையில் சாப்பிடச் சொன்னாராம். இருவரும் எதிர் எதிராக அமர்ந்திருந்தார்களாம்.

அனுமனும், இராமனும் உணவு முறையில் வேறுபாடு இருந்தது. அப்போதுதான் அணில் முதுகில் கோடு போட்ட மாதிரி, வாழை இலையின் நடுவிலும் தனது கையால் ஒரு கோட்டைக் கிழித்தாராம் ராமன்.

ராமர் இருந்த பக்கத்தில் மனிதர்கள் விரும்பி சாப்பிடும் உணவு வகைகளும், அனுமன் இருந்த எதிர் பகுதியில் குரங்குகள் விரும்பிச் சாப்பிடும் காய்கறிகளும் பரிமாறப்பட்டதாம். அப்படி பரிமாறிய அந்தப் பழக்கம்தான், இன்னும் நம்மிடையே தொன்று தொட்டு தொடர்ந்து வருகிறதாம்.

வாழை இலையில் சாப்பிடும் எல்லோருக்கும், சாப்பிடும் முன்... ஒரு நொடிக் குழப்பம் ஒன்று வந்தே தீரும்.

“பரிமாறும்போது இலையை எப்படிப் போடுவது..? இலையின் நுனி இடது பக்கமாக வர வேண்டுமா..? வலது பக்கமா..?” என்ற குழப்பத்தில் ஒரு சில நேரங்களில் தவிப்போம், ஆனால் எந்தப் பக்கம் இலையை போடுவது என்று எளிதாக கணித்துக் கொள்ளலாம்.

அதாவது, இலையின் நுனி, சாப்பிட அமர்ந்திருப்பவருக்கு இடது கை பக்கமாக வருகிற மாதிரி போட வேண்டும்.

ஏன் என்றால்..?

நாம் சாப்பிடும்போது, வலது கையால் பிசைந்து சாப்பிடுவதால், இலையின் வலது பக்கம் அதிக இடம் தேவை..!

உப்பு, ஊறுகாய், இனிப்பு.. இதையெல்லாம் ஓவராக சாப்பிட்டால் உடம்புக்கு ஒத்துக் கொள் ளாது. கொஞ்சமாகத்தான் சாப்பிட வேண்டும். அதனால்தான் இலையின் குறுகலான பாகத்தில் இட ஒதுக்கப்பட்டுள்ளது. சாதம், காய் கறிகள்... இவற்றையெல்லாம் நிறைய சாப்பிடலாம். அதனால் அவற்றை இலை யின் அகலமான வலது பக்கத்தில் பரிமாற வேண்டும்.

அதே போன்று இலையில் முதலில் இனிப்பு வைக்கப்படுவதற்கும் காரணம் உண்டு. இலையில் வைக்கப்படும் இனிப்பை எடுத்து வாயில் வைத்த அடுத்த நொடியில்... அந்த இனிப்பு, உடனடியாக உமிழ் நீருடன் கரைந்து, ரத்தத்தில் கலந்து மூளைக்குச் சென்று, வயிற்றில் ஜீரண சக்திக்கு தேவையான அமிலங்களை சுரக்க செய்ய உத்தரவிடுகிறது. அதனால்தான் ஜீரணம் எளிதாக நடைபெறுகிறது.

ஆனால் தற்போது பலர் சாப்பாட்டிற்கு பின்பு இனிப்பை சாப்பிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இது தவறான வழி முறைகளாகும். “விஞ்ஞான அறிவு நமது முன்னோர்களுக்கு இல்லை, நாம்தான் தற்போது மிகப் பெரிய விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம்” என்று நினைக்கும் பலருக்கு, சாதாரணமாக நினைக்கும் உணவு பரிமாறப்படும் ஒரு விஷயத்திலேயே நமது முன்னோர்கள் எவ்வளவு முன் யோசனையுடன் எவ்வளவு பெரிய அறிவியல் காரணத்தை மறைத்து வைத்துள்ளனர் என்பதை பார்க்கும் போது சற்று மலைப்பாகத்தான் இருக்கும்.







## மற்றவர்களும் பயன்பெற
## அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 6,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

**aanmeegamalar@gmail.com**

**whatsapp: 7299992699**

www.aanmeegamalar.com

# இருமனம் இணையும் திருமண முறை

மக்களின் நன்மைக்காகவும், சமூக நலன்களை பேணிக்காக்கவும் நமது முன்னோர்கள் பல்வேறு வழிமுறைகளை வகுத்து அதை, சடங்கு, சம்பிரதாயம் போன்ற பெயரிட்டு இந்து சமயத்துடன் இணைத்து, அதை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தி வைத்துள்ளனர் நமது முன்னோர்கள். அதன்படி தமிழர்களின் திருமண சடங்குகளில் செய்யப்படும் ஒவ்வொரு காரியங்களுக்கும் வலுவான காரணங்கள் உண்டு என்பதை பார்ப்போம்

அம்மி மிதிப்பது:

நான் கற்பு தன்மையில் அம்மியை போல் அதாவது கல்லை போல் உறுதியாக இருப்பேன் என்று கூறுவதற்காக அம்மி மிதிப்பு என்ற சடங்கை வைத்துள்ளனர்.

அருந்ததி பார்ப்பது:

பகலில் நட்சத்திரத்தை பார்ப்பதற்கு எவ்வளவு விழிப்புணர்வு வேண்டுமோ அதே போன்று விழிப்புணர்வோடு என் குடும்ப கௌரவத்தை காப்பாற்றவும் விழிப்புணர்வுடன் இருப்பேன் என்ற செய்தியை மற்றவருக்கு பரை சாற்றவே அருந்ததி பார்க்கும் சடங்கை வைத்துள்ளனர்.

அக்னி வளர்ப்பது:

திருமணம் முடித்து கொள்ளும் நாம் இருவரும் ஒருவர்க்கொருவர் விசுவாசமாகவும் அன்யோன்யமாகவும் இருப்போம் உன்னை (கணவனை) அறியாமல் நானும் என்னை(மனைவியை) அறியாமல் நீயும் தவறுகள் செய்தால் இந்த நெருப்பு நம் இருவரையும் சுடட்டும் இருவரின் மனசாட்சியையும் சுட்டு பொசுக்கட்டும் என்பதாகும்

வாழைமரம் கட்டுவது:

வாழை மரம் வளர்ந்து குலைதள்ளி தனது ஆயுளை முடித்து கொள்ளவேண்டிய நிலைக்கு வந்தாலும் கூட அடுத்ததாக பலன் தருவதற்கு தனது வாரிசை விட்டு செல்லுமே அல்லாது தன்னோடு பலனை முடித்து கொள்ளாது, எனவே திருமண தம்பதியரான நீங்கள் இருவரும் இந்த சமூதாயம் வளர வாழையடி வாழையாக வாரிசுகளை தந்து உதவ வேண்டும் என்பதே வாழைமரம் கட்டுவதின் ரகசியமாகும்

தாலி:

உலக முழுவதும் உள்ள திருமண சடங்கு முறையில் திருமணம் ஆனதற்கான அடையாள சின்னங்களை அணிந்து கொள்வது முறையாகவே இருந்து வருகிறது அதாவது மனித திருமணங்கள் அனைத்துமே எதோ ஒருவகையில் நான் குடும்பஸ்தன் என்பதை காட்ட தனிமுத்திரை இடப்படுவதாகவே இருக்கிறது. அப்படி உலகம் தழுவிய வழக்கங்களில் ஒன்று தான் தாலிகட்டும் பழக்கமாகும்

சங்ககாலத்தில் தாலி என்ற வார்த்தை இலக்கியங்களில் அதிகமாக பயன்பாட்டில் இல்லை என்பதற்காக பழங்கால தமிழன் தாலி கட்டாமல் வாழ்ந்தான் என்று சொல்வதற்கு இல்லை

தாலி என்ற வார்த்தை தான் இல்லையே தவிர இதே பொருளை கொண்ட மங்கலநாண் என்ற வார்த்தை இலக்கியங்கள் பலவற்றில் காணப்படுகிறது

தமிழர் திருமணங்களில் தாலியே மங்கல அணி என்ற வார்த்தைக்கு என்ன பொருள்

ஆண் பெண்ணை அடிமையாக்குவதோ பெண் ஆணை அடிமையாக்குவதோ சமூதாய பிரச்சனையே தவிர அது சடங்கு பிரச்சனை அல்ல

தமிழர் சடங்கில் எந்த இடத்திலாவது நீ தாலி அணிந்திருக்கிறாய் அதனால் எனக்கு நீ அடிமை என்ற வாசகம் கிடையவே கிடையாது.

உணமையாக தாலி அணிவதன் பொருள்

ஆண்மகனான நான் உன் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவிக்கும் இந்த நேரம் முதல் உன்னை பாதுகாக்கும் காவலனாக இருப்பேன்

இந்த மாங்கல்யத்தில் நான் போடும் முதல் முடிச்சு நீ தெய்வத்திற்கும் மனசாட்சிக்கும் கட்டுப்பட்டவள் என்பதை காட்டட்டும்

இரண்டாவது முடிச்சு குலபெருமையை நீ பாதுகாப்பாய் என்பதை காட்டட்டும்

மூன்றாவது முடிச்சு குலவாரிசுகளை முன்னின்று காப்பவள் நீயென்று காட்டட்டும் என்பதாகும்.

முற்காலத்தில் திருமணம் ஆன ஆண்கள் தாங்கள் திருமணம் ஆனவர்கள் என்பதை பறைசாற்ற காலில் மெட்டி அணிந்த நடை முறை இருந்தது. ஆனால் கால மாற்றத்தால் அந்த நடைமுறை மறைக்கப்பட்டது.

தமிழர்களின் திருமண சடங்குகள் அனைத்துமே ஆணையும் பெண்ணையும் சமமாக பாவித்தே இருக்கிறதே தவிர ஏற்ற தாழ்வு கற்பிக்கும் படி எதுவும் கிடையாது.

ஆனால் தற்போது பல்வேறு நாகரீக வளர்ச்சியில் பல்வேறு சம்பவங்கள் மாறிவரும் இந்த வேளையில் வெளிநாட்டு வாழ் மக்கள் இந்திய திருமண முறையை விரும்பி நமது கலாசாரமுறைப்படி திருமணம் செய்து கொள்வது அதிகரித்து வருவதில் நமது முன்னோர் வகுத்த முறையின் பெருமையை உணர முடிகிறது.





Advt.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன்
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
♦♦♦
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
♦♦♦

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598

**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070

# இறைவன் கொடுத்த மகிழ்ச்சியை மற்றவருக்கு கொடுப்போம்

வருடத்தின் கடைசி மாதங்களில் நாம் இருக்கிறோம் இந்த மாதங்களில் பல்வேறு பண்டிகைகள் வரிசையாக வரும் சிறப்பு பெற்ற மாதங்களாக உள்ளன.

அதிலும் குறிப்பாக தீபாவளி பண்டிகை என்ற மிகப் பெரிய பண்டிகை வரப்போகும் மாதமாகவும் திகழ்கிறது. பண்டிகைகளில் சிறந்த பண்டிகையாகவும், தீமைகளை மறைத்து தீப ஒளியில் நாடும், மக்கள் மனங்களும் ஒளிர வேண்டும் என்ற காரணத்தால் உருவான மிகப் பெரிய பண்டிகையாகும்.

உலக நாடுகள் பலவற்றிலும் இந்து மக்களால் வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ள பண்டிகை இது. குடும்ப உறுப்பினர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பண்டிகையும் இதுதான். இதைப் போன்று மகிழ்ச்சியை நமக்கு இறைவன் கொடுத்த வரமாகவும் நினைக்கலாம். அதே சமயத்தில் இந்த வரம் பெற முடியாத பல பேர் இருப்பதையும் நாம் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும்.

பண்டிகை கொண்டாடும் வசதியை நமக்கு இறைவன் கொடுத்துவிட்டான், என்று இறைவனுக்கு நன்றியை மட்டும் சொல்வதால் பயன் இல்லை, கொண்டாடும் சக்தியற்ற பலர் இருக்கும் போது நாம் மகிழ்ச்சியின் ஒரு சிறு பகுதியை அவர்கள் கொண்டாட்டத்திற்காக.... கொடுக்க நினைப்பதுதான் இறைவனுக்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

அப்படிக் கொடுக்க முடியாத நிலையில் நாம் இருந்தாலும், அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனையையாவது செய்ய வேண்டும். நம் நலனை மட்டுமே நாம் பார்த்துக் கொண்டிருந்தால் இறைவனின் கணக்கில் நமக்கு அதிகமாக “மைனஸ் பாயிண்ட்” ஏறிக் கொண்டே செல்லும்.

பண்டிகையின் போது மகிழ்ச்சிக்காக 1000 ரூபாய் செலவழிக்கும்போது அதில் ஒரு 10 ரூபாயை இயலாதவருக் கென்று ஒதுக்கி வைத்து மீதி பணத்தை கொண்டாட்டத்திற்கு செலவழித்துப்பாருங்கள் அதில் கிடைக்கும் மனதிருப்திக்கு அளவில்லாமல் இருக்கும்.

மற்றவருக்கு உதவும் மனப்பான்மையை உங்கள் குழந்தைகளின் முன்பு செய்யும் பழக்கத்தையும் வைத்துக் கொள்ளுங்கள். ஏன் என்றால், நாளை அவர்களும் சம்பாதித்து தங்கள் வாழ்க்கையை புதிதாக துவக்கும் போது “மற்றவருக்கு உதவ வேண்டும்” என்ற மனநிலையை உருவாக்கிவிடும் உங்களது செயல்.

லட்சக் கணக்கில் நீங்கள் செலவழிக்க வேண்டாம், உங்களால் இயன்ற சிறு உதவிகளை, உங்கள் ஊருக்கு அருகில் உள்ள அனாதை இல்லம், முதியோர் இல்லம், உங்களுக்கு அறிமுகமான வசதியற்றோர், தாய் இல்லாத குழந்தைகள், தந்தை இல்லாத குடும்பங்கள், பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியவர்கள் இது போன்ற எண்ணற்றவர்களில் ஒரு சிலருக்கு நீங்கள் உதவுங்கள்.

ஒரு வேளைக்கான நல்ல சாப்பாடு வாங்கிக்கொடுப்பது, புதுதுணி வாங்கிக் கொடுப்பது, இனிப்பு காரம் வழங்குவது, தரமான பட்டாசு அன்பளிப்பாக கொடுப்பது... இது போன்ற ஏதாவது ஒரு உதவியை செய்யுங்கள். நீங்கள் செய்யும் உதவி அவர்களுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியை தரும்




என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அதே சமயம் செய்யும் உதவிக்கு விளம்பரம் தேடாதீர்கள்.... அப்படி விளம்பரம் தேடி செய்யும் உதவிக்கு பயனற்ற பலன்தான் கிடைக்கும். “வலது கை கொடுக்கும் உதவி இடது கைக்கு தெரியாமல் செய்யுங்கள்” என்ற பழமொழியை மனதில் நிறுத்தி உதவுங்கள்.

சில அன்பர்கள் “கால நிலை, பணி நிலை, வெளிநாட்டில் வசிக்கும் சூழ்நிலை இதுபோன்ற காரணங்களால் உதவிகளை நேரிடையாக செய்ய முடியவில்லை எங்களுக்கு உதவ முடியுமா” என்று கேட்டிருந்த காரணத்தால், அவர்களுக்கு உதவுவதற்கான ஒருசில ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

நீங்கள் செய்ய விரும்பும் உதவிகளை எங்களுக்கு தெரியப் படுத்தினால் உங்கள் சார்பில் அந்தப் பணியை நாங்கள் செய்கிறோம், உதவி செய்ய நினைக்கும் உங்களுக்கு நாங்கள் உதவுகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 7299992699 / 8939499598

– ஆசிரியர்

**தொடர்ந்து வெளிவர உதவுங்கள்**

நமது ஆன்மிகமலர் டிரஸ்ட்டின் மூலம் வெளிவரும் ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தினை பல்வேறு இணையதளங்களில் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதற்கு முந்தைய இதழ்களையும் வரப்போகின்ற மற்ற இதழ்களையும் தொடர்ந்து இணையதளத்தில் நிரந்தரமாகவும், இலவசமாகவும் ஆன்மிக அன்பர்கள் தொடர்ந்து பார்த்து, டவுன்லோடு செய்யும் வகையில் பணிகள் தொடர்கின்றன. எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம். நீங்கள் செய்யும் சிறு உதவி எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

மேலும் தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8825844033
aanmeegamalar@gmail.com



# அற்புதம் வாய்ந்த ஓம் சிவசிவ ஓம்

“சிவ மந்திரங்கள் பல இருக்கின்றன. ஆனால் அவற்றை நாம் எப்படி பயன்படுத்துவது, மந்திரங்களை சரியான முறையில் சொல்ல வில்லையென்றால் பாவம் சேரும், நல்ல நோக்கத்திற்காக சொல்லப்போய் எதிர்மறையான தீமையான விஷயங்கள் வந்து விட்டால் என்ன செய்வது” என்று பலர் பலவாறு குழம்புவதால்தான், இன்றைக்கு இந்து மதத்தில் சக்தி வாய்ந்த மந்திரங்களை மக்கள் பயன்படுத்த பயப்படுகிறார்கள்.

பிறந்த குழந்தை வளரும்போது “அம்மா, அப்பா” என்று சரியான உச்சரிப்பில் சொல்வது கிடையாது. ஒருசில சமயம் “ஏய்... கீய்...” என்று வாய்க்கு வந்த வார்த்தையில் அழைக்கும் குழந்தையை நாம் கோபித்துக் கொள்கிறோமா? அதுபோலத்தான் இறைவனின் பிள்ளைகளான நாம் இறைவனை உச்சரிக்கும் சில வார்த்தையில் தவறு இருந்தாலும் அதனால் கெடு பலன் என்பது நம்மை வந்து சேராது.

குழந்தை வளர வளர “அம்மா, அப்பா” என்ற வார்த்தையை தெளிவாக கூறும். இதைப் போன்று இறைவனை குறித்து நாம் உச்சரிக்கும் தவறான வார்த்தை போகப் போக சரியானதாக அமைந்து விடும்.

ஆனால் வீண் பயம் பக்தியை பாதிக்கும் என்பதால் நமது முன்னோர்கள் அனை வருக்கும் எளிதாக வரும் ஒரு அற்புதமான மந்திரத்தை உருவாக்கினார்கள். அதுதான் “ஓம் சிவசிவ ஓம்” இந்த மந்திரத்தை எந்த ஜாதி, மத இனப் பாகுபாடின்றி யார் வேண்டுமானாலும் ஜபிக்கலாம்.

ஒரே தகுதி சைவ உணவு பழக்கமும், எந்த உயிரையும் துன்புறுத்தாத ஜீவகாருண்ய உணர்வும் மட்டுமே இருந்தால் போதும்.

இதற்கு தீட்சை பெற வேண்டியதில்லை; ஓம் என்னும் அட்சரத்தில் ஆரம்பித்து ஓம் என்னும் அட்சரத்தில் முடிவதால், குடும்பஸ்தர்களுக்கு ஏற்றது. இந்த மந்திரத்தை ஜெபிப்பதால் குடும்ப வாழ்க்கையில் இருந்தாலும் அருளும் பொருளும் சேர்ந்தே கிடைக்கும்.

எல்லா மந்திரங்களும் இதில் அடக்கம் என்பதால், வேறு எந்த மந்திரம் ஜெபிக்க வேண்டியதில்லை. முதலில் குலதெய்வத்தை வணங்கிக் கொள்ள வேண்டும். அது தெரியாதவர்கள் இஷ்ட தெய்வத்தை வழிபடவேண்டும். பிறகு விநாயகரை வழிபட வேண்டும். பிறகு தினமும் காலை 108 முறையும், மாலை 108 முறையும், “ஓம் சிவசிவ ஓம்” என்ற மந்திரத்தை ஜபித்து கொண்டே வரவேண்டும்.

ஒரு சில நாட்களிலேயே நமது நீண்ட காலப் பிரச்னைகள், நோய்கள் தீர ஆரம்பிக்கும். பலன் கிடைத்த உடனே விட்டுவிடக்கூடாது. தொடர்ந்து இந்த மந்திரத்தை பிரயோகித்து வர வேண்டும்.

அமைதியான மனநிலையில் தான் இந்த மந்திரம் ஜெபிக்க வேண்டும். மிகுந்த நம்பிக்கையோடு ஜெபிக்க வேண்டும். இந்த மந்திரத்தை ஜெபிக்க நாள் கிழமை என்று பார்க்கத் தேவையில்லை. அப்படி நாள்கிழமை பார்க்க வேண்டுமென்றால் “அமாவாசை”யன்று இந்த ஓம் சிவசிவ ஓம் மந்திரத்தை ஜபிக்க ஆரம்பிக்கலாம். மார்க்கண்டேயனை எமனிடமிருந்து காத்ததைப் போன்று இம்மந்திரத்தை ஜெபிப்ப வரை சிவ கணங்களே காக்கும். 21 வயதிற்கு மேற்பட்ட எவரும் இந்த மந்திரத்தை தினமும் ஜபித்துவரலாம்.

பவுர்ணமி, அமாவாசை, சிவராத்திரி, தமிழ் மாதப் பிறப்பு, தமிழ் வருடப்பிறப்பு நாட்களில் இந்த மந்திரத்தை ஜபிக்க பலகோடி மடங்கு பலன்கள் கிடைக்கும்.

எந்த மலையில் இருந்தாலும், எந்த கடலில் இருந்தாலும், எந்த வனத்தில் இருந்தாலும் இந்த மந்திரம் உங்களைக் காப்பாற்றும்.

இந்த மந்திரங்களுக்கு சிவ கணங்கள் அனைத்தும் கட்டுப்படும். இந்த மந்திரம் ஜெபிக்கும்போது, உலகில் சூட்சுமமாக இயங்கும் சிவ கணங்கள் இந்த மந்திர வார்த்தைக்கு கட்டுப்பட்டு உங்களது நியாயமான கோரிக்கையை நிறைவேற்றும்.

அதுவும் திருவண்ணாமலையில் கிரிவலம் செல்லும்போது இந்த “ஓம்சிவசிவஓம்” மந்திரத்தை ஜபித்து கொண்டு சென்றால், அடுத்த சில நாட்களில் கர்மப்பிரச்னைகள் திடீரெனத் தீரும் என்பதை பலர் அனுபவத்தில் உணர்ந்துள்ளதாக கூறுகின்றனர். ஒரு சில சமயங்களில் மந்திரம் ஜெபிக்கக்கூடாது என்று கூறுவார்கள். அதற்கு சில கார ணங்கள் உண்டு. மந்திரம் ஜெபிக்கும்போது நமது மனமும் உடலும் தன்னிகரில்லா ஒருவித இறை ஐக்கியத்தில் ஈடுபடும். அவ்வாறு ஈடுபடும் போது ஒரு சில நேரங்களில் தன்னிலை மறந்து போகவும் வாய்ப்பு உள்ளது. எனவேதான் நடக்கும்போதும், வாகனம் போன்றவற்றை ஓட்டும் போதும் மந்திரம் சொல்லக்கூடாது என்று முன்னோர் கூறியுள்ளனர். அதே சமயம் இறைவனை வேண்டி செய்யப்படும் காரண காரியங்களில் மந்திரத்தை சொல்லாம், திருவண்ணாமலை கிரிவலத்தின் போது நமது வழிபாடே கிரிவலமாக இருப்பதால், அப்போது நடந்து கொண்டே இந்த “ஓம்சிவசிவஓம் மந்திரம்” ஜபிக்கலாம். பலனை எதிர்பாராமல் கால, சமயம் கிடைக்கும் போதெல்லாம் “ஓம்சிவசிவஓம்” என்ற மந்திரத்தை விபூதி, ருத்திராட்சம் போன்ற அருட்சாதனங்களை அணிந்து ஜெபித்து வந்தால் உடலில் புத்துணர்ச்சியும், மனசக்தியும் கூடுவதுடன், முகத்தில் தேஜசான ஒளியும் கிடைக்கும்.

## கிழமைக்கேற்ப பலன்

“ஓம்சிவசிவஓம்” மந்திரத்தை ஒவ்வொரு கிழமைகளில் ஜெபித்தால் ஒரு சில பலன்கள் விரைவாக கிடைக்கும். கீழ்க்கண்ட பலன்கள் வேண்டுவோர் கீழ்காணும் கிழமைகளில் அசைவ உணவை தவிர்த்து, விரதமிருந்து “ஓம்சிவசிவஓம் மந்திரம்” மந்திரத்தை உபயோகப்படுத்தலாம்.

| | |
|---|---|
| ஞாயிறு | பதவி உயர்வு, பதவி வேண்டுவோர் |
| திங்கள் | நல்ல வாழ்க்கைத்துணை வேண்டுவோர் |
| செவ்வாய் | தீராத நோய்களை எளிதாக தீர்க்கும் |
| புதன் | கல்வி, வித்தைகளில் நல்ல தேர்ச்சிகிடைக்கும் |
| வியாழன் | ஆத்மஞானம் பெற வேண்டின் |
| வெள்ளி | பண நெருக்கடி நீங்கவும், செல்வ வளம் பெருகவும் |
| சனி | கண்திருஷ்டி, செய்வினைக் கோளாறு, மனக்கோளாறு நீங்கிட |

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# சான்றோரின் லக்ஷணங்கள்

- கெட்டவர்கள் உள்ள கிராமத்தில் குடியிருத்தல், சுவையில்லாத உணவு, எரிந்து விழும் மனைவி, முட்டாளான மகன் ஆகிய இவையாவும் ஒரு மனிதனுடைய உடம்பை நெருப்பு இல்லாமலே எரித்து விடுகின்றன.
- பால் கறவை அற்றுப் போன ஒரு மலட்டுப் பசுமாடு எப்படி உபயோகம் அற்றதோ அதேபோல கல்வியும், தெய்வ பக்தியும் இல்லாத மகனால் எந்த உபயோகமும் இருக்கப் போவதில்லை !



- ஒரு சந்திரன் இருளைப் போக்குகிறது. ஆனால் நக்ஷத்திரங்கள் ஆயிரமிருந்தும் இருளைப் போக்க முடியாது. அது போல நூறு குணமில்லாத மகன்களை விட ஒரு குணமுள்ள மகன் மேலானவன் ஆவான்.
- ஒருவனாக இருந்து தனிமையில் ஜபம் செய்வது நல்லது.
- இருவராகச் சேர்ந்து படிப்பது உதவும்.
- மூவராகச் சேர்ந்து பாடுவது சிறக்கும்.
- நால்வர் சேர்ந்து வெளியில் செல்வது மகிழ்ச்சிகு உதவும்.
- ஐந்து பேர் சேர்ந்து க்ஷேத்ரங்களுக்கு யாத்திரை செல்வது துணை பயக்கும்.
- போரென்று வரும்போது பலர் சேர்வது நலம் பயக்கும்.
- தெய்வ பக்தி உள்ளவளும், வீட்டு வேலைகளில் திறமைசாலியும், கற்பு உள்ளவளுமே உயர்ந்த மனைவி !
- தர்மத்தில் பற்று, பேச்சில் இனிமை, தானம் கொடுப்பதில் உற்சாகம், நண்பனிடம் நேர்மை, குருவிடம் பணிவு, உள்ளத்தில் கம்பீரம், நடத்தையில் சுத்தம், நற்குணங்களுக்கு மதிப்பு, சாஸ்திரங்களில் தேர்ச்சி, உருவத்தில் அழகும், சிவனிடத்தில் பக்தி இவை எல்லாம் சான்றோரின் லக்ஷணங்கள் ஆகும்.

– சாணக்கியர்